PUBLIC LIBRARY
PUBLIC LIBRARY JAFFNA

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

20.08.2008 - மலர் 05, இதழ் 24



கலைச்சிற்பி

மைக்கல் ஏஞ்சலோ

உலகின் ஒரலிப்பான நகரம்

சுழற்றியடித்த மெண்டிஸ்

துறைமுகத்தின் செயற்பாடுகள்

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Price Rs. 20.00
விலை ரூ: 20.00
(மலைய பதிப்பு) விஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் புகழ்பெற்ற தத்துவவாதியும் இலக்கியவாதியுமான

# கலீல் ஜிப்ரான்

**உலகில் காலத்திற்குக் காலம் பல கவிஞர்கள் இலக்கியவாதிகள், தத்துவஞானிகள் தோன்றி மறைந்துள்ளனர். அந்த வரிசையில் உலகில் புகழ்பூத்த தத்துவார்த்தமான கவிதைகளை எழுதி அதன் மூலம் தத்துவஞானத்தை உலகில் பரப்பிய ஒருவரே கலீல் ஜிப்ரான் என்ற இலக்கியவாதியாவார். இவருடைய தத்துவார்த்தமான கவிதைப் படைப்புக்கள் 'ஜிப்ரான் வாதம்' என்றழைக்கப்படுகின்றன.**

**"அறிவை உனக்குப்போதனை செய்கின்ற வரையில் அதற்கு நீ செவிசாய்க்க வேண்டும். அப்போது நீ பாதுகாப்புப் பெறுகின்றாய். அந்தப் போதனைகளைகொண்டு நீ படிப்பினை பெறவேண்டும். அதன் ஊடாக நீ எதிர்வரும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பவனாக இருப்பாய். எதன் காரணத்தால் என்றால் இறைவன் உனக்கு அறிவைப் போன்ற மேன்மை பெற்ற வேறு எந்த வழிகாட்டலையும் ஆயுதத்தையும் வழங்காததால் ஆகும். அறிவே உன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கிடைக்கின்ற எல்லா ஆயுதங்களையும் விட உயர்வான ஆயுதமாகும்"**

அறிவைப் பற்றி கலீல் ஜிப்ரான் என்ற தத்துவஞானி வெளியிட்ட கருத்து இதுவாகும். அவர் ஒரு தலைசிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார். நாம் இலக்கியங்களை படிக்கும்போது ஏராளமானவற்றைக் கற்றுக்கொள்கின்றோம். எமது வாழ்க்கையை வளம் பெறச் செய்ய இவ்வாறான ஒரு கவிதையால் முடியும்.

கலீல் ஜிப்ரானின் கவிதைத் தொகுப்புக்களில் இருந்தும் இது போன்ற அன்றாட வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய பல விடயங்கள் உள்ளன.

அதேபோன்று அவர் புகழ் பெற்ற தத்துவவாதியுமாவார் (Philosopher). அவரின் தத்துவங்கள் (மெய்யியல்) உலகை ஈர்த்தவையாகும்.

### வாழ்க்கை வரலாறு

கி.பி 1883 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் திகதி ஜிப்ரான் வட லெபனானில் பிறந்தார். அவர் தமது வாழ்நாளில் அதிக காலத்தை அமெரிக்காவில் செலவிட்டார். இவரது குடும்பத்தில் இருந்த இவரின் சகோதரர்களில் பாடசாலை சென்று கற்ற ஒரே நபர் இவராவார்.

### ஜிப்ரான் வாதம் (Jibranism)

இவரது இலக்கியம் உலகம் பூராவும் மிகவும் வேகமாகப் பரவியது. இவர் தத்துவார்த்தமான தமது கவிதைகளில் மெய்யியலையும் சேர்த்து வெளியிட்டார். மெய்யியல் என்ற இவரது தத்தவார்த்தமான இலக்கியம் காரணமாக இவரது தத்துவத்தை உலகத்தவர் 'ஜிப்ரான் வாதம்' (Jibranism) என்று அழைத்தனர்.


### ஜிப்ரான் அரும்பொருட் காட்சியகம்

இவர் இலக்கியவாதியாகவும் தத்துவவாதியாகவும் இருந்தது மட்டுமல்லாது பிரபல்யம் பெற்ற ஓவியராகவும் இருந்தார். வட லெபனானில் ஜிப்ரான் என்ற பெயரில் இன்றும் இருந்து வருகின்ற அரும்பொருட்காட்சியகத்தில் இவர் வாழ்ந்த காலத்தில் வெளியிட்ட கவிதைகள், தத்துவார்த்த கருத்துக்கள் அடங்கிய நூல்கள், வரைந்த ஓவியங்கள், பயன்படுத்திய பொருட்கள் என்பன வரலாற்று ஆவணங்களாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### இலக்கியப் பணி!

அவர் வாழ்ந்த 48 வருட காலங்களில் 40 வருடங்கள் இலக்கியத் துறைக்காக பங்காற்றியுள்ளார். அவரின் 8 வயது முதல் இந்த ஆற்றல் அவரில் வெளிப்படலாயிற்று. சிறுவயது முதல் கவிதைகள் எழுதிய அவர் தொடர்ச்சியாக 40 வருடகாலம் இலக்கியத்துறைக்கும் தத்துவத்துறைக்கும் அரும் பணியாற்றினார்.

அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவரது படைப்புக்கள் வெளியாகின.



### தூதுவர் (The prophet)

அவர் எழுதிய நூல்களில் 'நீங்கள் தூதுவர் அல்லது வழிகாட்டி' என்ற நூல் அவரின் ஏனைய நூல்களை விட கூடுதலாகப் பிரபல்யம் பெறலாயிற்று. இந்நூல் இன்று வரையில் 43 மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றது.

### குழந்தைகள் பற்றி ஜிப்ரான் வாதம்

உலகில் விலை மதிக்கமுடியாத செல்வங்களாகக் கருதப்படும் குழந்தைச் செல்வங்கள் பற்றி அவர் அதிகமான கவிதைகளில் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளார். அவரது கவிதைத் தொகுப்பொன்றில் குழந்தைகள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"உங்கள் குழந்தைகள் உங்களுக்கு சொந்தமானவர்கள் அல்ல. அவர்கள் வ்ாழ்க்கையின் உன்னத இலட்சியங்களின் சொந்தக்காரர்கள். அவர்கள் உங்களில் இருந்து வருபவர்களேயன்றி உங்களில் உள்ளவர்களல்லர். அவர்களுக்கு நீங்கள் அன்பு காட்டுங்கள். ஆனால், உங்கள் வறட்டுக் கற்பனைகளை அவர்களில் திணிக்க முற்பட வேண்டாம். ஏனெனில், அவர்களில் அவர்களுக்கென்ற சுயமான சிந்தனைகள் ஊற்றெடுக்கவுள்ளன. அதற்கு இடமளித்து அவர்கள் சிந்தனையாளர்களாக உருவாக இடமளியுங்கள்"

அவரது அனைத்து நூல்களிலும் எமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்னோரன்ன பல விடயங்கள், பிரச்சினைகளுக்காக அவரால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகள் என்பன இன்றும் பயனுள்ள அறிவுரைகளாகவும் வழிகாட்டல்களாகவும் உள்ளன.

"முன்னோக்கிச் செல்லுங்கள். பின்வாங்க வேண்டாம். இடையில் நிற்கவேண்டாம். ஏனெனில், முன்னோக்கிச் செல்லுதல் பரிபூரணத்துவத்தை அல்லது மானிட வாழ்வில் முழுமையை இலட்சியத்தின் உன்னத நிலையை நோக்கிச் செல்வதாகும்" என்று அவர் தமது தத்துவங்கள் ஊடாக மனித முயற்சிக்கு ஊக்கமளிக்கின்றார்.

"வாழ்க்கைப் பயணத்தில் உனது பாதையில் பரப்பப்பட்டுள்ள கற்களும் முட்களும் உனது பயணத்தில் தடையல்ல. அவற்றைக் கண்டு அஞ்ச வேண்டாம்" என்றும் அவர் கூறுகின்றார்.

### மரணம்

1883 ஆம் ஆண்டு பிறந்த அவர் 1931 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தனது 48 ஆவது வயதில் மரணமடைந்தார்.

### இலக்கியப் படைப்புக்கள்

| | |
|---|---|
| 01. Spirit rebellious | (1908) |
| 02. The broken wing | (1912) |
| 03. A tear and a smile | (1914) |
| 04. The procession | (1918) |
| 05. The mad man | (1918) |
| 06. The forerunner | (1920) |
| 07. The prophet | (1923) |
| 08. Sand and foam | (1926) |
| 09. Jesus the son of man | (1928) |
| 10. The earth gods | 1931) |
| 11. The wanderer | (1932) |
| 12. The garden of the prophet | (1933) |
| 13. Laza russ and his belored | (1933) |


அமீர் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFN...

# நூல்களை வாசிக்க உதவும் ரோபோக்கள்

ஜேர்மனியின் மியூனிச் நகரில் அமைந்துள்ள 'பவேரியன்' தேசிய பல்கலைக்கழக நூல் நிலையமானது 450 வருடங்கள் பழைமை வாய்ந்தது. சமயச் சீர்திருத்தத்தில் முக்கிய பங்கு வகித்த 'மார்ட்டின் லூதர்' யுகத்தில் இருந்து இன்று வரை வெளியாகியுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களை கணினி மூலம் வழங்குவதற்காக 'டிஜிட்டல்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இப்பல்கலைக்கழகத்தின் நூல் நிலையமானது இப்பொழுது 'ரொபோ' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளது.



இதனால், நவீன தொழில்நுட்பத்தின்கீழ் ரொபோ இயந்திரத்தைப் பயன்படுத்தி இந்தச் செயற்பாட்டை துரிதப்படுத்த முடியும் என இந்நூல் நிலைய இயக்குனரான மார்க்ஸ் பிரன்டல் கூறுகின்றார். இந்த இயந்திர மனிதனை இயக்குவதற்கு ஒருவரது உதவியும் தேவைப்படமாட்டாது என்றும், மணித்தியாலத்திற்கு 700 பக்கங்களை டிஜிட்டல் செய்யமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த முறையின்படி நூலின் ஒவ்வொரு பக்கமும் புரட்டி டிஜிட்டல் முறைக்குட்படுத்தப்படுவதால் புத்தகத்தின் பக்கங்களில் ஏற்படும் கிழிதல், நூல் சிதைவு என்பனவற்றைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனவும் கூறப்படுகின்றது. ஏனெனில், நூலொன்று 60 பாகை கோணத்திலேயே புரட்டப்படுகின்றது.

'ஸ்கேன் ரொபோ' என அழைக்கப்படும் இந்த இயந்திரத்தின் ஆரம்பத் திட்டத்தை கலாநிதி வுல்பெங் செக்லர் என்பவர் 2002 ஆம் ஆண்டு வரைந்தார். தான் மேற்கொண்ட ஒரு புகையிரதப் பயணத்தின் போதே இதனை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தனது திட்டத்தை அவுஸ்திரேலியாவின் 'இன்ஸ்பார்க்' பல்கலைக்கழகத்தில் பரீட்சித்துப் பார்த்தார். அதன்படி, நவீன ரொபோ இயந்திரத்தின் மூலம் நூல்கள் பாதுகாக்கப்படுவதோடு மிக விரைவாக இந்நூல் நிலையத்தில் உள்ள 90 இலட்சத்திற்கும் அதிகமான நூல்களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான நூல்களை கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் பெறக்கூடியதாய் இருந்தன.

ஒரு மணித்தியாலத்திற்கு 700 பக்கங்கள் வீதம் 10 இலட்சத்திற்கும் அதிகமான புத்தகங்களை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உள்வாங்கக் கூடியதாக இருந்தது.

ஒரு மணித்தியாலத்தில் 10 இலட்சம் நூல்கள் வரை இணையத் தளத்தில் உள்வாங்கக் கூடியதாக இருந்தமையால் மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுசரி, இத்தகைய நவீன ரொபோ இயந்திரத்தின் விலை என்ன தெரியுமா? 1,25,000 அமெரிக்க டொலர் ஆகும். இலங்கை நாணயப்படி ஏறக்குறைய ஒரு கோடியே 35 இலட்சமாகும்.

-வீபாகர்

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

உலக குடியிருப்புத் தினத்தையொட்டி

# வீடமைப்பு அதிகார சபை நடத்தும் போட்டிகள்

ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி உலக குடியிருப்புத் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதையிட்டு வீடமைப்பு அதிகார சபையினால் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.



சமுதாயத்தில் பொருளாதாரத் துறையில் சமத்துவத்தை உருவாக்குதல், மனிதனாலும் இயற்கையினாலும் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகளிலிருந்து விடுபடுதல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் எரிபொருள் ஆகியனவற்றைப் பயனுள்ள வழியில் உபயோகித்தல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியவாறு 'சகவாழ்வு நகரங்கள்' என்ற தலைப்பில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அதன்படி சித்திரப் போட்டியில் 'ஏ' பிரிவில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களும் 'பி' பிரிவில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களும் 'சீ' பிரிவில் தரம் 12 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களும் பங்குபற்றலாம்.



கட்டுரைப் போட்டிகளில் 'ஏ' பிரிவில் தரம் 6-11 வரையிலான மாணவர்களும், 'பி' பிரிவில் தரம் 11-12 வரையான மாணவர்களும் பங்குபற்றலாம். இதில் 'ஏ' பிரிவு மாணவர்கள் 1000 சொற்களுக்கும், 'பி' பிரிவு' மாணவர்கள் 1,500 சொற்களுக்கும் அதிகப்படாமல் கட்டுரைகளை எழுதுதல் வேண்டும்.

இப்போட்டியில் வெற்றி பெறுவோரில் முதலாவது பரிசாக 10,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 7,500 ரூபாவும் மூன்றாம் பரிசாக 5,000 ரூபாவும் பணப் பரிசாக வழங்கப்படும். இன்னும் சிறந்த ஐந்து ஆக்கங்களுக்கு தலா 2000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும்.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை
பிரதிப் பொது முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அதிகாரசபை,
7 ஆம் மாடி,
சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை,
கொழும்பு-2 என்ற முகவரியிலோ அல்லது வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டக் கிளைக் காரியாலயங்களிலோ பெற்றுக்கொள்ள முடியும்.

# ஐ.நா. கட்டடத்தின் சிறப்பு



ஐக்கிய நாடுகள் சபை கட்டடமே உலகில் கண்ணாடியிலான மிகப்பெரிய கட்டடமாக கருதப்படுகின்றது. 18 ஏக்கர் நிலப்பரப்பில் எழுப்பப்பட்டிருக்கும் பிரமாண்டமான அக்கட்டடத்தில் 39 மாடிகள் உள்ளன.

அங்குள்ள கண்ணாடி ஜன்னல்களின் எண்ணிக்கை 6,50,000. மொத்த ஜன்னல்களை ஒரு தடவை கழுவிச் சுத்தம் செய்ய ஒரு வருடம் செல்லுமாம்.ஒன்பது தொழிலாளர்கள் இடுப்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு, அந்தரத்தில் தொங்கியவாறு மாதத்திற்குச் சுமார் 54 ஆயிரம் ஜன்னல்களை சுத்தம் செய்கின்றார்கள்.

2,300 தட்டச்சாளர்கள் அங்கு கடமையாற்றுகின்றனர். முப்பது வெவ்வேறு மொழிகளில் செய்திகள் வழங்கப்படுகின்றன.

பத்து நாடுகளிலிருந்து 42 சமையல்காரர்கள் கொண்ட உணவு நிலையம் அக்கட்டடத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நாள்தோறும் சுமார் பத்தாயிரம் பேர் அக்கட்டடத்திற்கு வந்து சுற்றிப் பார்க்கிறார்கள். அவர்களை அழைத்துச் சென்று சுற்றிக்காட்ட 65 பெண் ஊழியர்கள் உள்ளனர்.

வழவழப்பான தரையை மினுக்குவதற்கு 182 இயந்திரங்கள் உள்ளன. இக்கட்டடத்தைச் சுற்றி விசாலமான தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில் உலகில் உள்ள எல்லா வகைப் பூஞ்செடிகளும் உள்ளன. 2000 வகையான ரோஜா மலர்ச் செடிகளும் அங்கு வளர்கின்றன.

# இலங்கை வாழ் மக்களின் ஆயுட்காலம் பத்து வருடங்களால் அதிகரிப்பு

இலங்கை வாழ் மக்களின் ஆயுட்காலம் பத்து வருடங்களால் அதிகரித்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மேற்படி ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையின்படி இலங்கை வாழ் மக்களில் பெண்களின் ஆயுட்காலம் 79 வயது வரையிலும் ஆண்களின் ஆயுட்காலம் 69 வரையிலும் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டு மக்களின் ஆயுட்காலம் பத்து வருடங்களாக அதிகரித்த ஒரே ஆசிய நாடு இலங்கைதான் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரிவிற்கான தேசிய ஆலோசகர் ஹரிஸ்சந்திர யக்கன்நாவல, கல்வித்தரம் அதிகரிப்பு உட்பட இதர பல காரணங்களின் அடிப்படையில் இலங்கை மக்களின் ஆயுட்காலம் பத்து வருடங்களால் அதிகரித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனக் கப்பல் ஒட்டகம்



**பாலைவன மணலில் பிரயாணம் செய்வதற்கென இருக்கும் ஒரே வாகனமான ஒட்டகம். மத்திய கிழக்கு அரபியர்களின் வாழ்க்கை முறைகளோடு மிகவும் பின்னிப் பிணைந்ததாக இருக்கின்றது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒட்டகங்கள் இரண்டு வகையாகும். முதுகில் இரண்டு திமில்கள் உள்ளவை. மற்றும் ஒரு திமில் மட்டும் உள்ளவை என இவற்றை வகைப்படுத்தலாம்.**

## ஒட்டகங்களின் வாழ்க்கை

ஒட்டகங்கள் ஆபிரிக்காவிலும் ஆசியாவில் உள்ள பாலைவனப் பிரதேசங்களிலும் அதிகமாக வாழ்கின்றன. 'ரோமன்த ஷரபாய்' என்ற உயிரியல் பெயர் கொண்டு அழைக்கப்படும் ஒட்டகங்கள் மென்று அசைபோடும் உயிரினக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

வாயினால் இலகுவில் எதனையும் அரைக்கும் அளவுக்கு சக்தி மிக்க பற்கள் உள்ளன. ஒட்டகங்களின் நுரையீரல் சற்று அகலமானவை. ஏனைய மிருகங்களில் இருந்து அது வேறுபடுகின்றது.

ஒட்டகங்களுக்கு கொம்புகள் உள்ளன. ஆனால், அவை நீண்டு வளர்ச்சியடைவதில்லை.அவை வெளியே தெரியும் அளவு வளர்ந்து முதிர்ச்சியடைகின்றன. மேற்கூறப்பட்ட இரண்டு வகை ஒட்டகங்களுக்கும் வெளிப்படையாகத் தென்படக் கூடிய வேறுபாடுகள் மேலும் சில உள்ளன.

## 'டொமடரி' அரேபிய ஒட்டகம்

இந்த வகை ஒட்டகங்கள் வட ஆபிரிக்க பாலைவனப் பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை 'டொமடரி' அல்லது 'அரேபிய ஒட்டகங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இதன் உயிரியல் பெயர் 'கமலுஸ் டிரோமொடோரியுஸ்' என்பதாகும். இந்த வகை ஒட்டகங்களுக்கு முதுகில் ஒரு திமில் மட்டுமே இருக்கின்றது.

## 'பெக்ட்ரியன்' இன ஒட்டகம்

இவ்வினத்தைச் சேர்ந்த ஒட்டகங்களுக்கு முதுகில் இரண்டு திமில்கள் உள்ளன. பிரயாணம் செய்பவர் இந்த இரண்டு திமில்களுக்கும் நடுவே விரிப்பை விரித்து வசதியாக அமர்ந்து பிரயாணம் செய்யலாம்.

கடும் குளிரான அல்லது பனிக் காலப் பகுதியில் இவற்றின் ரோமங்கள் அடர்த்தியாக வளர்வதோடு உஷ்ணம் நிலவும் காலப்பகுதியில் ரோமங்கள் உதிர்ந்து உடம்பிற்கு சமநிலையைக் கொடுக்கின்றது. அதனால், இவ்வகை ஒட்டகங்களால் கடும் பனிக்காலத்தில் போன்று கடும் உஷ்ண காலத்திலும் மற்றும் எல்லா வகை காலநிலையிலும் தாக்குப்பிடிக்க முடிகின்றது.

இவை சைபீரியா, மொங்கோலிய பகுதி மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளன.

## உணவு

இலை குழைகள், பற்றைத் தாவரங்களே பெரும்பாலும் ஒட்டகங்களின் உணவாகின்றன. முதுகில் உள்ள திமிலில்தான் ஒட்டகத்தின் கொழுப்பு சேமிக்கப்படுகின்றது.

உணவு இல்லாத சந்தர்ப்பத்தில் சில நாட்களுக்கு ஒட்டகங்களால் பட்டினியாகவும் இருக்க முடியும். அப்போது இந்த திமிலில் இருந்து தான் உடம்பிற்குத் தேவையான போசணைப் பதார்த்தங்கள் வெளிப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## குடும்ப வாழ்க்கை

ஒட்டகத்தின் கர்ப்ப காலம் 11 மாதங்களாகும். ஒருமுறை ஒரு குட்டியை மட்டுமே ஒட்டகம் ஈனுகின்றது. இதன் ஆயுட்காலம் 40-50 வருடங்களாகும்.

## ஒட்டகங்களால் கிடைக்கும் நன்மைகள்

ஒட்டகங்கள் மக்களுக்கு பல்வேறு விதங்களில் நன்மைகள் புரிகின்றன. பொதிகளைச் சுமக்க, பிரயாணத்துக்கான வாகனமாக, இறைச்சிக்காக, பால் பெறுவதற்காக மட்டுமன்றி ஒட்டகங்களின் ரோமத்தில் இருந்து கம்பளி, கம்பளங்கள், போர்வையும் தயாரிக்கப்படுகின்றன. இந்த வகையில் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒட்டகங்கள் பெரும் பங்களிப்பு செய்கின்றன.

நிலத்தை உழுது பண்படுத்துவதற்குரிய விவசாயத் தேவைக்கும் ஒட்டகம் பயன்படுகின்றது. இதனால், அரேபிய வரலாறு பற்றி எழுதும் வரலாற்றாசிரியர்கள் அரேபியர்களின் வாழ்க்கையில் இருந்து ஒட்டகத்தைபிரிக்க முடியாது என்று குறிப்பிடுகின்றனர்.

## ஒட்டகக் குடும்பம்

ஒட்டகம் அடியொடக்டிலா உப குலத்தின் கமலிடா கோத்திரத்திற்குரிய மிருகமாகும். ஒட்டகத்திற்கு மிக அண்மையில் உறவு பாராட்டக் கூடிய இன்னும் சில மிருகங்களும் உள்ளன. 'லாமா', அல்பெகா ஆகியன இந்த வகை மிருகங்களாகும். இவற்றைப் பழக்கி மனிதத் தேவைக்கு பயன்படுத்த முடிந்தாலும் இன்னும் சில அவ்வாறு கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதவைகளாக உள்ளன.

விகுனா, குவனொக் என்ற ஒட்டகங்களின் உருவங்களுக்குச் சமமான மிருகங்கள் அவ்வாறு பழக்கப்படுத்திப் பயன்படுத்த முடியாதவையாகும். இவை தென் அமெரிக்காவின் 'அந்தீஸ்' மலைப்பிரதேசங்களில் வாழ்கின்றன. ஒட்டகக் குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் சிறிய மிருகம் 'விகுனா'(Vikuna) ஆகும்.

பெரு மற்றும் பொலிவியா தேச மக்களின் வாழ்க்கையோடு இணைந்த மிருகம் 'அல்பெகா' (Alpeka) என்ற மிருகமாகும். இந்த மிருகத்தின் அடர்த்தியான ரோமம் வெட்டப்பட்டு ஆடைகள், போர்வைகள், கம்பளங்கள் தயாரிக்கப்படுகின்றன.

'லாமா' என்ற மிருகம் ஒட்டகம் போன்று பிரயாணத் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது. 100 கி.கிராம் சுமையை சுமந்து செல்லும் பலம் கொண்டது இது. செம்மறி ஆடு போன்று முகம் கொண்டதாகவும் கொம்புகள் உடையதாகவும் இருக்கும். பால் மற்றும் இறைச்சிக்காகவும் இந்த 'லாமா' இன மிருகம் பயன்படுத்தப்படுகின்றது.




பக்ரியுன் வகை ஒட்டகம்



அல்பெகா வகை ஒட்டகம்

அமீர் ஹுசைன்



பெக்ட்ரியன் என்ற இன்னுமொரு வகை

டொமடரி ஒட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஓகஸ்ட் 1 சூரிய கிரகணம்: சில குறிப்புகள்

உலகின் சில நாடுகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பூரண சூரிய கிரகணத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி கிடைத்தது.

இந்தச் சூரிய கிரகணம், ஆர்க்டிக் கண்டம், சைபீரியா, கனடா, கிறீன்லாந்து, நோர்வே, மொங்கோலியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் பூரண சூரிய கிரகணமாக தோற்றமளித்தது. இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இது, குறைச் சூரிய கிரகணமாகவே காட்சியளித்தது. சைபீரியாவின் நொவொசிபிர்ஸ்க் நகரத்தில் இந்தச் சூரிய கிரகணத்தை மிகத் தெளிவாக அவதானிக்க முடிந்துள்ளது.

இச்சூரிய கிரகணமானது, இரண்டு மணித் தியாலங்கள் நீடித்துக் காணப்பட்டது. இதைக் கண்டுகளிப்பதற்காக சைபீரியாவுக்கு வந்த உல்லாசப் பயணிகளால், முதல் தடவையாக சைபீரியா ஒரு சுற்றுலாத் தளமாக மாறியதாக செய்திகள்



தெரிவித்திருந்தன. சுமார் 10,000 பேர் நொவொசிபிர்ஸ்க் நகரத்திற்கு சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர்.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி ஆரம்பமான 'ஒலிம்பிக்' போட்டிகளுக்கு இந்தச் சூரிய கிரகணம் ஓர் அபசகுனமாகவே காணப்படுவதாக சீன மக்கள் நம்புகின்றனர். ஆனாலும், ஒலிம்பிக் போட்டிகள் இதுவரை இல்லாத வகையில் மிகப் பிரமாண்டமான முறையில் ஆரம்பித்து தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




# செவ்வாயில் நீர் இருக்கின்றது!

அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செவ்வாய்க் கிரக ஆய்வுச் செயன்முறையின் ஒருபடியாக, கடந்த மே மாதம் 'பீனிக்ஸ்' என்ற விண்ணோடம் அனுப்பப்பட்டு, செவ்வாயின் வடக்குப் பகுதியில் தரையிறக்கப் பட்டது. இந்த 'பீனிக்ஸ்' ஓடத்தின் பயண நோக்கம் செவ்வாய்க் கிரகத்தில் நீர் காணப்படுகிறதா? என்பதனைக் கண்டறிவதாகும். செவ்வாய்க் கிரகத்தின் மண் மாதிரிகளை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர், செவ்வாயில் நீர் இருப்பதாக 'பீனிக்ஸ்' ஆய்வோடம் உறுதிப்படுத்தியுள்ளதாக அண்மையில் நாஸாவின் விஞ்ஞானிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

செவ்வாய்க் கிரகத்தின் வெளியொழுக்கில் அமையப்பெற்று, செவ்வாயை அவதானிக்கும் 'Mars Obiter' ஓடத்திற்கும் 'பீனிக்ஸ்' ஆய்வோடத்திற்கும் செவ்வாயில் பனிக் கட்டி காணப்படுவதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றாலும் செவ்வாயின் நீர் மாதிரியைப் பெற்று, அதனை பரிசோதனை செய்து பார்த்ததன் பின்னர் தான் நீர் இருப்பதற்கான ஆதாரத்தை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடிந்தது என நாஸாவின் அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார். 'பீனிக்ஸ்' விண்ணோடத்தின் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாக நாஸாவின் விஞ்ஞானிகள் மகிழ்ச்சி வெளியிடுகின்றனர்.



அத்தோடு, செவ்வாயின் மேற்பரப்பில் பீனிக்ஸ் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வை, செப்டெம்பர் மாதம் வரை நீடிப்பதற்கும் நாஸா முடிவு செய்துள்ளது. பீனிக்ஸ் ஆய்வோடத்தினை செவ்வாய்க்கு அனுப்பியதற்கான நோக்கம் அனைத்தும் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளதாக, செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்குப் பொறுப்பான பிரதான விஞ்ஞானி மைக்கேல் மேயர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பீனிக்ஸ் ஆய்வோடமானது, ரொபோ கைகளைப் பயன்படுத்தி செவ்வாயின் மேற்பரப்பில் அகழ்தலை மேற்கொண்டது. கடந்த மார்ச் 25ஆம் திகதி செவ்வாயின் மேற்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட அகழ்தலின்போது முதன்முதலாககிடைக்கப் பெற்றது வெள்ளைப் பதார்த்தமொன்றாகும். இது பனிக்கட்டியென்று பின்னர் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. இதேவேளை, பீனிக்ஸ் செவ்வாய்க் கிரகத்தில் பெற்றுக் கொண்ட தகவல்கள் நாஸா விஞ்ஞானிகளுக்கு இன்னமும் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. இதிலிருந்து உயிர் வாழ்வதற்கான சூழல் செவ்வாயில் உண்டா? அல்லது ஏற்கனவே இங்கு உயிர்கள் வாழ்ந்தனவா? என்பதைக் கண்டறியக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செவ்வாய்க் கிரகத்தில் பெறப்பட்ட மண்மாதிரிகளில் சோடியம், பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற முதன்மையான போசணைக்கூறுகள் காணப்படுவது இதுவரை கண்டறியப்பட்டுள்ளது. ஆனாலும், காபன் சேர்வைகள் எதுவும் இதில் இருப்பதாக இதுவரை அறியப்படவில்லை.

## சூரிய குடும்பம் பற்றி அறிந்து கொள்வோம்

### பிரபஞ்சம் - Universe



கோடிக்கணக்கான உடுத் தொகுதிகளால் அமையப் பெற்றதுதான் எமது பிரபஞ்சம். எல்லைகளே அற்று பரந்து விரிந்து கிடக்கும் பிரபஞ்சத்தில் எத்தனை உடுத்தொகுதிகள் காணப்படுகின்றன என்பதைக் கணக்கிடுவது மிக மிகக் கடினமான காரியமாகும். இந்த உடுத் தொகுதிகள் வெவ்வேறான வடிவங்களைக் கொண்டு காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சில சமச்சீராகவும் இன்னும்சிலவோ சமச்சீரற்றும் காணப்படும்.

### உடுத்தொகுதி - Galaxy



பிரபஞ்சத்தில் பல பில்லியன் கணக்கான உடுத்தொகுதிகள் காணப்படுகின்றன. இந்த ஒவ்வொரு உடுத்தொகுதியிலும் உடுக்கள், வாயு மற்றும் தூசு துணிக்கைகள் என்பன காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இந்த உடுத்தொகுதிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இவை காலப்போக்கில் தமக்கே உரித்தான வடிவங்களைப் பெற்றுக்கொண்டன. ஓர் உடுத்தொகுதியில் பில்லியன் கணக்கான உடுக்கள் காணப்படுகின்றன. இந்த உடுக்கள் யாவும் ஒருமித்து காணப்பட 'ஈர்ப்பு' விசையே காரணமாகும். இந்த 'ஈர்ப்பு' விசையே உடுத்தொகுதியின் வடிவத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில்
# அனுபவ அறிவு



பிள்ளைகள் பாடசாலைகளில் பல பாடங்களைக் கற்றுக் கொள்கின்றனர். இந்த பாடத்திட்டங்களினால் பல நோக்கங்கள் நிறைவேறுகின்றன. இவ்வரிசையில் கணித பாடங்களில் வாழ்க்கைக்குத் தேவையான கணக்கு சம்பந்தமான அறிவு பயிற்றுவிக்கப்படுகின்றன. சமூக விஞ்ஞானமானது உலக நாடுகளின் சுற்றுப் புறச்சூழல்களில் காணப்படும் பௌதிக வளங்கள் மற்றும் இதர இயற்கை விடயங்கள் குறித்த தகவல்கள் பற்றி அறியத் தருகின்றது.

இவ்வாறு பாடத்திட்டத்திற்கு ஏற்ப பற்பல அறிவாற்றல்கள் வகுப்பறையில் மாணவர்களுக்கு கிடைத்தாலும் சில விடயங்கள் பற்றிய அறிவு நேரடியாக பாடத்திட்டங்களினால் கிடைப்பதில்லை. அவற்றை அனுபவத்தினால் மட்டுமே பெறமுடியும்.

## அனுபவங்கள் என்றால் என்ன?

அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சம்பவங்களினால் பெறப்படும் அறிவையே அனுபவ அறிவு என்கின்றோம். இந்த அனுபவங்களை சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை கொண்டிருப்பர். அனுபவ அறிவை வளர்த்துக் கொள்ள பல்வேறு சூழ்நிலைகளை அறிதல், புதிய இடங்களுக்கு சென்று வருதல் போன்ற வழக்கங்களை கைக்கொள்ளுதல் அவசியமாகும். இயன்றவரை சமூகத்துடன் தொடர்புகளைப் பேணுதல் அனுபவ அறிவுக்கு அவசியம். நீங்கள் வகுப்பறையில் மட்டும் இருந்து விட்டு செல்லும் பிள்ளையாயின் உங்களுக்கு கிடைக்கும் அனுபவ அறிவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். ஆனால், பாடசாலையின் பேச்சுக் குழுவில் அல்லது சுற்றுப் புறச்சூழல் குழுவில், விளையாட்டுக் குழுவில் இடம் பெற்றால் உங்களுக்கு கிடைக்கும் அனுபவங்கள் அதிகமானதாக இருக்கும். ஏனெனில், அவற்றினால் வெளித் தொடர்புகள் அதிகரிக்கும். அந்த அனுபவ அறிவு இவ்வாறான செயற்பாடுகளில் பங்குபற்றுவதனால் கூட்டாக பணியாற்றும் குழு மனப்பான்மை, பிரச்சினைகளை சந்திக்கும் ஆற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், சவால்களை எதிர்கொள்ளல், பொதுத் தீர்வுகளைத் தேடல், பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தலும் வாய்ப்பளித்தலும், தலைமைத்துவப் பண்புகள் அதிகரிப்பு, சுறுசுறுப்பு, உத்வேகம், மகிழ்ச்சி, ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் என்பன அதிகரிக்கும்.

## அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு?

பாடசாலைகளில் வகுப்பறைக்கு வெளியே நிகழும் நிகழ்வுகளில் கலந்து கொள்வது அனுபவ அறிவைப் பெற்றுக் கொள்ளவுள்ள ஒரு வழிமுறை மட்டுமே. அதனைத் தவிர அதிகளவிலான அனுபவ அறிவினைப் பெற்றுக் கொள்ளவிருக்கும் வழிமுறை வாழ்வின் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் கிடைக்கின்றது. வீடுகளில் விடுமுறை காலத்தின் போதும், பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போதும், மதம் சார்ந்த இடங்களில் நிகழும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போதும் அவற்றுக்கு உதவிகள் பங்களிப்புக்களைச் செய்யும் போதும் அனுபவ அறிவினை தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும். வீட்டில் உங்களது அன்னையுடன் இணைந்து அவருக்கு சமையலறை உதவிகளைச் செய்ய முடியும். காய்கறிகள் பற்றி, அவற்றின் நலன்கள் பற்றி, அவற்றின் போசணை பற்றி, சமைக்கும் முறைகள், சமையலில் பாவிக்கப்படும் இதர பொருட்கள், அவற்றை பயன்படுத்தும் முறைகள் என்பன பற்றி இதன்போது அறிந்து கொள்ள முடியும்.

கிழிந்த உடையொன்றை தைத்துக் கொள்வதற்கு கற்றுக் கொள்ளல், வீட்டை சுத்தம் செய்தல், வீட்டு தளபாடங்களை உரிய இடத்தில் வைத்திருத்தல் என்பன பல அனுபவங்களைக் கற்றுத் தரும் விடயங்களாகும்.

அதேபோன்று, வீட்டுத் தோட்டத்தில் பழங்கள், காய்கறிகள், மருத்துவ குணம் மிக்க தாவரங்களை நடல், வீட்டு வாசலில் பூக்கன்றுகளை நடுதல், பாத்திகளை அமைத்தல் என்பனவற்றினால் உங்களுக்கு கிடைக்கும் மன ரீதியான ஆரோக்கியம் மற்றும் உத்வேகம் என்பன அவ்வாறான அனுபவங்களின் பலன்களை மென்மேலும் அதிகரிக்கும் எனலாம்.

அயலவர்களுக்கு உதவுதல், திருமண வைபவம், மரணச் சடங்கு நிகழ்வுகள் என்பனவற்றில் கலந்து கொள்ளல் சிறந்ததாகும். பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களினது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிபெற அவசியம்

மத அனுட்டானங்களில் கலந்து கொள்வது, அவர்களுக்குரித்தான சமய நிகழ்வுகளில் பங்குபற்றுவது என்பனவும் மத அனுட்டானங்கள் மற்றும் மதங்கள் பற்றிய சிறந்த அனுபவங்களைப் பெற்றுத் தரவல்லவை. இந்த அனுவங்கள் பலதரப்பட்ட மதம் கலாசாரம் மற்றும் இனத்தைச் சேர்ந்த வர்களுடன் நட்புறவுடன், புரிந்துணர்வுடன் வாழ்வதற்கு உதவும் எனலாம்.

## ஆண்கள் வேலை, பெண்கள் வேலை என்று வேறுபாடுள்ளதா?


இன்று சமூகத்தில் சில வேலைகள் பெண்களுக்குரியவை. சில வேலைகள் ஆண்களுக்குரியவை என்ற மனநிலை நிலவுகின்றது. குறிப்பாக ஆடைகள் தைத்தல், சமையல் வேலைகள், பூக்கள் வளர்த்தல், வீட்டைத் துப்பரவு செய்தல் என்பன பெண்களுக்குரிய வேலைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வேலைகளில் பாகுபாடு காட்டும் நடைமுறை நம் நாட்டைப் போன்ற வறிய நாடுகளில்தான் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்த முதலாம் தர நாடுகளான ஜப்பான், சீனா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இவ்வாறான வேறுபாடுகள் காட்டப்படுவதில்லை. அந்நாடுகளில் வீட்டு வேலைகளை செய்ய வேலைக் காரர்களை அமர்த்திக் கொள்வது கூட மிகவும் குறைவு. ஆண்கள் அனைவராலும் உணவு சமைக்க முடியும். சிறு பிள்ளைகள் கூட தமக்குத் தேவையான வேலைகளை தாமே செய்து கொள்கின்றனர். பெரியோர்கள் சகல வேலைகளிலும் சிறுவர்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அதனால், அந்நாடுகள் மிகவும் வேகமான முன்னேற்றம் அடைந்தன.

மனிதனின் மூளை ஏனைய விலங்குகளின் மூளையை விட விசேட அம்சம் பொருந்தியது. இந்த மூளையை நன்கு பயன்படுத்தி, சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்வதனை சிறு வயது முதலே மேற்கொள்ள வேண்டும். புத்தகங்களை மட்டுமே கற்பதனால் சிந்தனை வளர்ச்சி ஏற்படாது. வளரும் நாடுகளுடன் இணைந்து பயணிக்கவும் முடியாது. அனுபவங்களினால் தமது வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்ளாதவர்கள் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள முடியாதவர்கள். இதனால், அவ்வாறானவர்கள் இறுதியில் மன நோயாளிகளாகவும், தற்கொலை செய்பவர்களாகவும் மாறும் நிலை ஏற்படும். அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு பலதரப்பட்ட சவால்களையும் எதிர்கொண்டு அதனால் வாழ்க்கையை விளங்கிக் கொள்வதே சிறந்த வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். இது அதற்கான சிறந்த காலகட்டமாகும்.

-பிரியதர்ஷினி



# பூமிக்குள்ளிருந்து புராதன கால தேர் அகழ்ந்தெடுப்பு





தென்கிழக்கு பல்கேரியாவில் புராதன காலத்து திராஷியன் புதைகுழியொன்றிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட தேர் ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்தெடுத்துள்ளனர்.

இத்தேர் சுமார் 1900 வருடங்கள் பழைமை மிக்கது என்றும் தெரியவருகிறது. தலைநகர் சோபியாவுக்கு சுமார் 180 மைல் தூரத்தில் உள்ள பொரிசோவோ கிராமத்திற்கு அருகில் தமது குழு இந்தத் தேரை அகழ்ந்தெடுத்துள்ளதாக மேற்படி குழுவின் தலைவியான டேனியெலா அக்ரே கூறினார். முற்றுமுழுதாக பாதுகாக்கப்பட்ட ஒரு தேரை பல்கேரியாவில் தாம் அகழ்ந்தெடுத்திருப்பது இதுவே முதல் தடவையென்றும் அவர் கூறினார்.

புராதன காலத்துப் பகுதிகளில் அடிக்கடி திருட்டுக்கள் நடைபெறும் காரணத்தால் தமது குழு இதற்கு முன்னர் தேரின் பாகங்களை மட்டுமே அகழ்ந்தெடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த சவக்குழி மேட்டிலிருந்து தமது குழுவினர் மேசை மட்பாத்திரங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் ஒரு செல்வந்த திராஷியன் பிரபுவின் இறுதிக் கிரியைகளுக்கான பெறுமதி மிக்க அன்பளிப்புக்களை இந்த ஆராய்ச்சிக் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். இதேவேளை, இன்னொரு குழியிலிருந்து இக்குழுவினர் இரண்டு சவாரிக் குதிரைகளின் எலும்புக் கூடுகளையும் மற்றும் நன்கு பாதுகாக்கப்பட்ட வெண்கல, தோல் பொருட்களையும் குதிரையின் கடிவாளம் என்று நம்பப்படும் பொருட்களையும் அகழ்ந்தெடுத்துள்ளனர். இந்தக் குதிரைகள் திராஷியன் செல்வந்தரின் இறுதிக் கிரியைகளின் போது பலியிடப்பட்டவையாக இருக்குமென்றும் கருதப்படுகின்றது.

திராஷியன் இனத்தவர்கள் பல்கேரியாவிலும் மற்றும் கிரேக், துருக்கி, மஷிடோனிய, ரோமானிய நாடுகளின் பகுதிகளிலும் வாழ்ந்த புராதன இனம் என்பது குறிப்பிடத்தக்கது. -ராஜா

# தீயிலிருந்து குடும்பமொன்றை காப்பாற்றியது முயல்



எஜமானி

தீயிலிருந்து குடும்பத்தவர்களை காப்பாற்றியது அக்குடும்பத்தவர்களின் வளர்ப்பு முயல். இச்சம்பவம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுள்ளது.

கணவனும் மனைவியுமான இந்த தம்பதியினர் தமது வீடு தீப்பற்றிக் கொண்ட வேளையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர். தீ வீடு முழுவதும் பரவ இருந்த அவ்வேளையில் அவர்களின் வளர்ப்பு முயல் படுக்கை அறைக்குள் பாய்ந்து சென்று தத்தித் தத்தி தன்னால் இயன்றளவு சப்தத்தை எழுப்பி அவர்களை எழுப்பியுள்ளது. வீடு மிக மோசமாக எரிந்து நாசமடைந்துவிட்ட நிலையிலும் முயலின் முயற்சியால் அதிர்ஷ்டவசமாக அவர்கள் உயிர் தப்பிவிட்டனர். இதற்காக தமது வளர்ப்பு முயலுக்கு அவர்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

முயலின் எஜமானியான மைக்கேல் பின்னர் இதுபற்றிக் கூறுகையில், தானும் தனது கணவரும் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள்தான் என்று கூறினார்.

இந்தத் தீ விபத்தில் நாங்கள் எவ்வளவோ பெறுமதியான பொருட்களை இழந்துவிட்டோம். ஆனால், எங்களின் முயலின் உதவியால் நாங்கள் இன்று உயிரோடு இருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.





சேதமடைந்த வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Atlas அற்லஸ் சித்ரூ-7 (2008)

# அகில இலங்கை சித்திரம், கட்டுரை, உறுப்பெழுத்துப் போட்டி

'அற்லஸ்' அகில இலங்கை போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளவர்களின் பெயர்கள் இங்கு வழங்கப்படுகின்றன. அகில இலங்கை ரீதியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரமான பரிசளிப்பு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். மாகாண மட்டத்திலான வெற்றியாளர்களுக்குரிய பரிசளிப்பு விழா தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

அகில இலங்கை ரீதியிலும், மாகாண மட்டத்திலும் சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியோரின் சித்திரங்கள் செப்டெம்பர் 9 ஆம் திகதி காலை 9 மணி முதல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கண்காட்சியில் வைக்கப்படும். தொடர்புகள்: 011 2912874

## சித்திரம்

மெக்சா மெத்தினி (அகில இலங்கை 1 ஆம் இடம், சப்ரகமுவ மாகாணம் 1 ஆம் இடம்) தேஜனா (அகில இலங்கை 2 ஆம் இடம், மேல் மாகாணம் 1 ஆம் இடம்) சத்சரணி (அகில இலங்கை 3 ஆம் இடம், மேல் மாகாணம் 2 ஆம் இடம்) ஜித்தாரா (மேல் மாகாணம் 3 ஆம் இடம்) தில்சரா (சப்ரகமுவ மாகாணம் 2 ஆம் இடம்) அத்தபத்து (சப்ரகமுவ மாகாணம் 3 ஆம் இடம்) அஞ்சனா (வடமத்திய மாகாணம் 1 ஆம் இடம்)

ஹசன் (வடமத்திய மாகாணம் 2 ஆம் இடம்) சந்ரசேன (வடமத்திய மாகாணம் 3 ஆம் இடம்) சிவானிகா (வடமாகாணம் 1 ஆம் இடம்) அப்துல்லாஹ் (அகில இலங்கை 1 ஆம் இடம், வடமேற்கு மாகாணம் 1 ஆம் இடம்) சவிந்தா (அகில இலங்கை 2 ஆம் இடம், மேல்மாகாணம் 1 ஆம் இடம்) சனிந்தா சபுஞ்சி (அகில இலங்கை 3 ஆம் இடம், மத்திய மாகாணம் 1 ஆம் இடம்) பெரேரா (மேல் மாகாணம் 2 ஆம் இடம்) யதித்தி (மேல் மாகாணம் 3 ஆம் இடம்) பாக்யா மதுஷான் (அகில இலங்கை 1 ஆம் இடம், மேல் மாகாணம் 1 ஆம் இடம்) சேனவிரத்ன (அகில இலங்கை 2 ஆம் இடம், தென் மாகாணம் 1 ஆம் இடம்) வமன்ஷா (அகில இலங்கை 3 ஆம் இடம், ஊவா மாகாணம் 1 ஆம் இடம்) தித்மி ரங்கீதா (மேல் மாகாணம் 2 ஆம் இடம்) வணிகசுந்தர (மேல்மாகாணம் 3 ஆம் இடம்) உதாரிகா (மத்திய மாகாணம் 1 ஆம் இடம்) செவ்மினி (மத்திய மாகாணம் 2 ஆம் இடம்) நதுன் ஹேரனாயக்க (3 ஆம் இடம்) நிபுனி உதாரிகா (அகில இலங்கை 1 ஆம் இடம், வடமேல் மாகாணம் 1 ஆம் இடம்) பசிந்து பியுமல் (அகில இலங்கை 2 ஆம் இடம், தென் மாகாணம் 1 ஆம் இடம்) பிரபா மதுஷானி (அகில இலங்கை 3 ஆம் இடம், சப்ரகமுவ மாகாணம் 1 ஆம் இடம்) ரமிது தவீஷா (மேல் மாகாணம் 1 ஆம் இடம்) சந்திமா விராஜினி (மேல் மாகாணம் 2 ஆம் இடம்) நிமாஷா செவ்வந்தி (மேல் மாகாணம் 3 ஆம் இடம்) கிஷோலினி (மத்திய மாகாணம் 1 ஆம் இடம்) பிரணவன் (வட மாகாணம் 1 ஆம் இடம்) அப்துல் கதுஜா கசுனி தேஜி (அகில இலங்கை 1 ஆம் இடம், மத்திய மாகாணம் 1 ஆம் இடம்)

குறிப்பு : உறுப்பெழுத்து, கட்டுரைப் போட்டிகளில் அகில இலங்கை மட்டத்தில் என்று குறிப்பிடப்பட்டவர்கள் மாத்திரமே 9 ஆம் திகதி பரிசளிப்பிற்கு அழைக்கப்படுகின்றனர். ஏனையவர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

## உறுப்பெழுத்து (1-2-3)

### மத்திய மாகாணம்

நியாஸ் அப்துல்லாஹ் (1 ஆம் இடம், சென்.மேரிஸ் கல்., நாவலப்பிட்டிய), நுஸ்ஹா நவ்ஃபர் (2 ஆம் இடம், கனிஷ்ட பாலிகா வித்., நாவலப்பிட்டிய), முஹம்மட் நியாஸ் முஹம்மட் ரஷாட் (3 ஆம் இடம், அஸ்-ஸிராஜ் ஆண்கள் பாட., கெலி-ஓயா)

### மேல் மாகாணம்

ரம்சி அலி அஹமட் அஷ்ஃபா (1 ஆம் இடம்-அகில இலங்கை 1 ஆம் இடம், அல்-அஸ்ஹர் ம.கல்., கலகெடிஹேன), செல்வா தமிழோஷினி (2 ஆம் இடம், ரோமன் கத்தோலிக்க த.வித்., வத்தளை), நந்தகுமார் ஜனாலினி (3ஆம் இடம், ரோமன் கத்தோலிக்க த.வித்., வத்தளை)

### கிழக்கு மாகாணம்

மு.சம்ஸுதீன் பாத்திமா சஹிபா ஷிம்ரா (1 ஆம் இடம், அல்-ஹிலால் வித்., சாய்ந்தமருது-2) பல்லிய குருகே ஜயசினி சித்மா (2 ஆம் இடம், உஹானா பாலர் பாட., அம்பாறை), சுலைமா லெப்பே பாத்திமா அஃப்னா (3 ஆம் இடம், அல்-ஹிலால் வித்., சாய்ந்தமருது-2)

### வடமத்திய மாகாணம்

ஏ.பி.எஃப்.சஃப்னா (1 ஆம் இடம்-அகில இலங்கை 3 ஆம் இடம், ஹொரவபொத்தானை மு.ம.வித்., அனுராதபுரம்) பி.எம்.எம்.அருஸ் பாத்திமா ஹஸ்னா (2 ஆம் இடம், கணேவல்பொல மு.ம.வித்., கெக்கிராவ), எம்.எஃப்.நஹ்தியா மரியம் (3 ஆம் இடம், ஸாஹிரா தே.பாட., அனுராதபுரம்)

### வட மாகாணம்

சி.அத்ஷயா (1 ஆம் இடம்-அகில இலங்கை 1 ஆம் இடம், வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் ம.வித்.,), பி.அஞ்சலிகா (2 ஆம் இடம், வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் ம.வித்.,)

### ஊவா மாகாணம்

பாத்திமா தஸ்னீம் (1 ஆம் இடம், முஸ்லிம் ம.வித்., வெலிமட)

### தென் மாகாணம்

மு.நளீம் பாத்திமா ஸின்ஹா (1 ஆம் இடம், ஸாஹிரா ம.வித்., வெலிகம.), அஸன்லெப்பே முஹம்மட் ஸுமைர் (மாறை/அரபா தே.பாட., வெலிகம.), மு.நஸிகா நுஸைக் அஹமட் (ஸாஹிரா ம.வித்., வெலிகம.)

### வடமேல் மாகாணம்

முஹம்மட் பயாஸ் முஹம்மட் பஹ்மன் (1 ஆம் இடம், மதீனா தே.பாட., சியம்பலாகஸ்கொட்டுவ.), கமரு-ஸமன் முஹம்மது ஸபீக் (2 ஆம் இடம், கெகுணகொல்ல தே.பாட., கெகுணகொல்ல.), முஹம்மட் பாஸிர் ஆயிஷா (3 ஆம் இடம், அல்-அஸ்ரா மு.ம.வித்., அம்பகோட்டே)

### சப்ரகமுவ மாகாணம்

முஹம்மட் ரொஷான் பாத்திமா ரிஸ்மா (1 ஆம் இடம், சுலைமானியா மத்தி கல்., கன்னத்தோட்டை.) முஹம்மட் சதகதுல்ல ஆயிஷா (2 ஆம் இடம், அஸ்ஹர் ம.வித்., ஹெம்மாத்தகம.) முஹம்மட் ஹுஸைன் பாத்திமா சஸ்னா (3 ஆம் இடம், திப்பிட்டிய மு.ம.வித்., அரணாயக்க.)

## உறுப்பெழுத்து (4-5)

### ஊவா மாகாணம்

எம்.எம்.நஸீஃப் நுஸ்கி (1 ஆம் இடம்), எம்.எப்.மஹிஷா யஸ்ரின் (2 ஆம் இடம்), கே.எப்.ருமைஸா (3 ஆம் இடம், வெலிமட மு.ம.வித்.,

### மத்திய மாகாணம்

சு.கீர்த்திகா (1 ஆம் இடம், கிளென்லொய்ன் த.வித்., அனுராதபுரம்), எம்.என். நுஸ்கா, 2 ஆம் இடம்), மு.நுஸைர் இம்ரா (3 ஆம் இடம், ஜப்பர் ம.கல்., கலகெதர)

### சப்ரகமுவ மாகாணம்

மு.ரஹ்மதுல்லாஹ் சபியா (1 ஆம் இடம், அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொட), மு.இம்தியாஸ் பாத்திமா இல்மா (2 ஆம் இடம், ஜெய்லானி தே.பா., பலாங்கொடை), மு.ஸமீர் பாத்திமா ஸர்ஃபானா (3 ஆம் இடம், ஜெய்லானி தே.பாட., பலாங்கொடை)

### வடமேல் மாகாணம்

ஐ.எப்.ஷிமா (1 ஆம் இடம், அல்-அஸ்ரா ம.வித்.,), எம்.எஸ்.எப்.சப்னா (2 ஆம் இடம்)

### தென் மாகாணம்

எம்.ஜே.பாத்திமா பஸ்னா (1 ஆம் இடம், அகில இலங்கை 3 ஆம் இடம், வெலிதர ம.வித்., பலப்பிட்டிய), ஏ.எச்.அப்ரா (2 ஆம் இடம், வெலிதர மு.மிதர மாவத்தை, பலப்பிட்டிய), எப்.டி.பாத்திமா நப்சா (3 ஆம் இடம், வெலிதர மு.ம.வித்., பலப்பிட்டிய)

### வட மாகாணம்

ம.மதுசனன் (1 ஆம் இடம், அகில இலங்கை 1 ஆம் இடம், வவுனியா த.ம.வித்., வவுனியா), தி.திவ்யா (2 ஆம் இடம், அகில இலங்கை 2 ஆம் இடம், புதுக்குளம் ம.வித்., வவுனியா)

### கிழக்கு மாகாணம்

ஸக்கப் ஸஹானா (1 ஆம் இடம், ஸாஹிரா கல்., திருகோணமலை), எம்.எஸ்.பாத்திமா சரீஹா (2 ஆம் இடம், மில்லத் ம.ம.வித்., கத்தான்குடி-2)

### வடமத்திய மாகாணம்

தி.பானுக தில்ஷான் (1 ஆம் இடம், சென்.ஜோசப் ம.வித்., அனுராதபுரம்), எம்.தி.தினுஷா பானு (2 ஆம் இடம், கெக்கிராவ மு.ம.வித்., கெக்கிராவ.

### மேல் மாகாணம்

மு.ஜவ்ஹர் பாத்திமா ஷிப்னா (1 ஆம் இடம், அல்/பஹாரியா ம.கல்., பாணந்துரை), அரவிந்தன் ராஜேந்திரன் (2 ஆம் இடம், சென்.தோமஸ் கல்., கல்கிசை), மு.இன்சார் பாத்திமா இஷ்கா (3 ஆம் இடம், மாலிகாஹேன மு.ம.வித்., பேருவளை)

## கட்டுரை 6-7-8

### சப்ரகமுவ மாகாணம்

ப.நிரோதனி (1 ஆம் இடம், இந்து கல்., பலாங்கொடை), மு.சிறாஜ் பாத்திமா ஷிப்னா (2 ஆம் இடம், தாருல் உலூம் ம.ம.வித்., ரம்புக்கன), மு.இல்ஹார் ஷாபி ஹசன் (3 ஆம் இடம், பாபூல் ஹசன் நவோத்யா ம.கல்., வரகாபொல)

### வடமேல் மாகாணம்

சி.சிந்துஜா (1 ஆம் இடம், அகில இலங்கை 1 ஆம் இடம், வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம்), மு.இஷாக் பாத்திமா ஷிபா (2 ஆம் இடம், அல்-அஸ்ரா மு.ம.வித்., குருணாகலை), அப்துல் நிஸார் பாத்திமா நொஹா (3 ஆம் இடம், கெகுணகொல்ல தே.பாட., கிரியுல்ல)

### தென் மாகாணம்

எம்.ஐ.எப்.சில்மியா (1 ஆம் இடம், மாறை/அரபா தே.கல்., வெலிகம), எம்.எம்.எப்.மின்சரா (2 ஆம் இடம், அரபா தே.பாட., வெலிகம)

### மேல் மாகாணம்

மு.முபாரக் இல்[illegible] பர்வின் (1 ஆம் இடம், அல்-பஸியதுல் நஸ்ரியா மு.பாலிகா ம.வித்., பேருவளை.), நிஸாம் அமீர் பர்ஹத் அயேஷா (2 ஆம் இடம், அளுத்கம வீதிய மு.பெண்கள் ம.கல்.,), சப்ருல்லாஹ்கான் முஹம்மட் ஸீஷான் (3 ஆம் இடம், ரோயல் கல்., கொழும்பு-7)

### கிழக்கு மாகாணம்

நர்த்தனா சுமந்திரன் (1 ஆம் இடம், வின்சென்ட் பெண்கள் உயர் பாட., மட்டக்களப்பு)

### வடமத்திய மாகாணம்

கே.ஆர்.எப்.சம்ரத் (1 ஆம் இடம், அகில இலங்கை 2 ஆம் இடம், கடந்துகம ஜெயா மு.ம.வித்.,), ஏ.எஸ்.சதீலா பர்வின் (2 ஆம் இடம், நிக்கவெவ மு.வித்., ஹொரவபொத்தானை), எம்.ஜே.எம்.நுஸ்ரின் (3 ஆம் இடம், துருக்கரகம மு.வித்., கஹடகஸ்திகிலிய)

### ஊவா மாகாணம்

தூரபதுல்லா சனாஸ் பானு (1 ஆம் இடம், அகில இலங்கை 1 இடம், முர்ஷித் ம.வித்., பதுளை), அப்துல் சலாம்தஸ்லிமா சுலைஹா (2 ஆம் இடம், வெலிமட மு.ம.வித்., வெலிமட), யூசுப் அஸ்மதுல் உருஷியா (3 ஆம் இடம், வெலிமட மு.ம.வித்., வெலிமட)

### மத்திய மாகாணம்

வாசுதேவன் இளங்கேஸ்வரன் (1 ஆம் இடம், கிளென்லொய்ன் த.வித்., அக்கரபத்தன), மு.அன்ஸார் ஆயெஷா ஷமீகா (2 ஆம் இடம், சென்.அந்தனிஸ் பெண்கள் கல்., கண்டி), நவ்ரன் பாத்திமா சஸ்னா (3 ஆம் இடம், சென்.அன்ட்ரூஸ் பாலிகா ம.வித்., நாவலப்பிட்டிய.

### வட மாகாணம்

பி.தேனீஜா (1 ஆம் இடம், புதுக்குளம் ம.வித்., வவுனியா.)

## கட்டுரை (9-10-11)

### மத்திய மாகாணம்

மு.முஹர்ஜீன் அயெஷா (1 ஆம் இடம், ஜமுல் அஸ்ஹர் ம.கல்., மடிகே), வி.துஷாந்தினி (2 ஆம் இடம், திம்புல்ல த.ம.வித்., பத்தனை), கு.குளோரி தர்ஷனா (3 ஆம் இடம், கதிரேசன் இந்து மகளிர் கல்., நாவலப்பிட்டிய)

### ஊவா மாகாணம்

க.ஜீவதாக்ஷா (1 ஆம் இடம், அகில இலங்கை 2 ஆம் இடம், ஊவா ஹைலன்ட்ஸ் த.ம.வித்., பண்டாரவளை), ஜெ.சரிகா (2 ஆம் இடம், அகில இலங்கை 3 ஆம் இடம், மடுல்சீமை த.ம.வித், மடுல்சீமை), அமீர் முஹம்மட் சித்தி ஷாமிலா (3 ஆம் இடம், அல்-முர்ஷித் ம.வித்., சில்மியபுரம்)

### கிழக்கு மாகாணம்

ஜே.பாத்திமா ரொஷானா (1 ஆம் இடம், அந்-நஹார் பெண்கள் ம.வித்., மூதூர்-3), எம்.கே.ரிஹானா பேகம் (2 ஆம் இடம், பருத்திவெளி மு.ம.வித், கந்தளாய்), ஆர்.ரக்ஷனா பரீஜா (3 ஆம் இடம், பருத்திவெளி மு.ம.வித்., கந்தளாய்)

### மேல் மாகாணம்

மு.ஹுஸைன் ஹனீனா பேகம் (1 ஆம் இடம், அல்-ஹசன் மு.வித்., வேவல்தெனிய), மு.ஸரூக் பாத்திமா ஸஹாமா (2 ஆம் இடம், மாலிகாஹேன மு.ம.வித்., பேருவளை), மு.ஹனாபி கதீஜா ஷம்ரத் (3 ஆம் இடம், நளீம் அஜைர் பெண்கள் கல்., பேருவளை)

### தென் மாகாணம்

எம்.எம்.எம்.ஆஷிக் ஹுஸைன் (1 ஆம் இடம், அகில இலங்கை 1 ஆம் இடம், துண்டுவ மு.ம.வித்., பெண்தோட்டை), எம்.எஸ்.எப்.சப்வா (2 ஆம் இடம், வெலிகம அந்-நூர் மு.பாலிகா ம.வித்., தெனிபிட்டிய), எம்.ஆர்.எப்.நஷாத் (3 ஆம் இடம், நாவின்ன மு.கனிஷ்ட வித்.)

### வடமேல் மாகாணம்

ஏ.எச்.பாத்திமா ஹதீசா (1 ஆம் இடம், பாத்திமா பாலிகா ம.வித்., புத்தளம்), எம்.மனோஷினி நூஷிகா (2 ஆம் இடம், கட்டைக்காடு ரோ.க.த.ம.வித்., கொட்டன்தீவு), மு.ஹனீபா பாத்திமா ஹஸ்னா (3 ஆம் இடம், பரகஹதெனிய தே.பாட., வேவுட)

### வடமத்திய மாகாணம்

ஜே.ஜெஸ்மினா (1 ஆம் இடம்,அல்.ரிபாய் ம.வித்., பொலன்னறுவை), எச்.எம்.எப்.ரம்சானா (2 ஆம் இடம், அல்-ரிபாய் ம.வித்., பொலன்னறுவை)

### சப்ரகமுவ மாகாணம்

ஜமீல் சுமையா (1 ஆம் இடம், பதூரியா ம.கல்., மாவனல்லை), மு.ஹபீல் முஹம்மட் ஷிப்கான் (2 ஆம் இடம், பதூரியா ம.கல்., மாவனல்லை)

## கட்டுரை (12-13)

### ஊவா மாகாணம்

என்.மஹாதேவி (1 ஆம் இடம், ஸ்ரீ கணபதி த.ம.வித்., பொரகஸ்), மு.முஸ்தபா பாத்திமா ஷாஹீரா (2 ஆம் இடம், அல்-முர்ஷித் ம.வித்., சில்மியபுரம்), மு.ஹனீபா பாத்திமா பிஷாரா (3 ஆம் இடம், அல்-ஆர்ஷித் ம.வித்., சில்மியபுரம்)

### வடமத்திய மாகாணம்

சஜுதீன் ஜலீலா (1 ஆம் இடம், அகில இலங்கை 2 ஆம் இடம், ஹொரவப்பொத்தானை மு.ம.வித்.,) ஏ.ப்ரஜீத் (2 ஆம் இடம், அகில இலங்கை 3 ஆம் இடம், கெக்கிராவை மு.ம.வித்., கெக்கிராவை)

### கிழக்கு மாகாணம்

எம்.எம்.ருஸ்மில் (1 ஆம் இடம், கிண்ணியா ம.கல்., கிண்ணியா-05), எம்.பாத்திமா ஸஹ்னாஸ் (2 ஆம் இடம், அந்-நஹர் பெண்கள் ம.வித்., மூதூர்-5), மு.நிஷாம் பாத்திமா முன்ஸிபா (1 ஆம் இடம், அல்-முபாரக் தே.பாட., மல்வானை)

### மத்திய மாகாணம்

பாத்திமா சமீனா தம்யா (1 ஆம் இடம், பதியுதீன் மஹ்மூட் பெ.கல்., கண்டி), பாத்திமா ரிஸ்னா இம்தியாஸ் (2 ஆம் இடம், பதியுதீன் மஹ்மூட் பெ.கல்., கண்டி), சின்னாஹ் தயாளன் (3 ஆம் இடம், திம்புல்ல த.ம.வித்., பத்தனை)

### தென் மாகாணம்

மு.சம்சதீன் ஸீனாதுல் ரிப்னா பேகம் (1 ஆம் இடம், முஸ்லிம் பெண்கள் பாட.,)

### வடமேல் மாகாணம்


பிரான்சிஸ் ஆன் (1 ஆம் இடம், அகில இலங்கை 1 ஆம் இடம், பரகஹதெனிய தே.பாட., வேவுட), பிரான்சிஸ் பிரசிலிதா (2 ஆம் இடம், பரகஹதெனிய தே.பாட., வேவுட), நஸார் பாத்திமா ரிபாதா (3 ஆம் இடம், அல்-அக்ஷா தே.பாட., கல்பிட்டிய.

### சப்ரகமுவ மாகாணம்

எட்வர்ட் ஜெனிபர் (1 ஆம் இடம், பலாங்கொடை த.ம.வித்., பலாங்கொடை), மு.ஜவார்ட் பாத்திமா ஜெஸ்லா (2 ஆம் இடம், அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாத்தகம)

போட்டி ஏற்பாடு: Atlas
ஊடக அனுசரணை: விஜய் ITN Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹாய்...! ஹாய்....! விடுமுறை வந்தாச்சு...

பாடசாலை விடுமுறை என்பது சின்னஞ்சிறியோரான உங்களுக்கு குதூகலம் பொங்கும் காலமாகும். விடுமுறை காலத்தை வெறுமனே விளையாட்டில் மட்டும் கழித்தால் அது எவ்வளவு வீண் என்பது விடுமுறை முடிந்து மீண்டும் பாடசாலை செல்லத் தயாராகும் போதுதான் தெரியவரும். அதனால், விடுமுறை காலத்தை பிரயோசனமுள்ளதாக்கிக் கொள்வது மிகநல்லது.

## நேரசூசி

காலம் பொன்னானது. அதனால், இந்தளவு நீண்ட காலப்பகுதியை அர்த்தமுள்ளதாகவும் பிரயோசனமான முறையிலும் பயன்படுத்த நேரசூசியொன்றைத் தயாரித்துக் கொள்வது அவசியம். அன்றாட செயற்பாடுகளுக்கு மேலதிகமாகப் படித்தவைகளை மீட்டல் செய்தல், விளையாடுதல், பெற்றோருக்கு உதவி செய்தல், உற்றார் உறவினர் வீடுகளுக்குச் செல்லுதல், சுற்றுலா செல்லுதல், பொது வேலைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளுக்காக நேரத்தை திட்டமிட்டு ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.









## காலையில்...

விடுமுறை காலத்தில் சில மாணவர்கள் நீண்ட நேரம் உறக்கத்தில் ஈடுபடுகின்றனர். இது ஒரு நல்ல செயல் அல்ல. விடுமுறையானாலும் பாடசாலை நாட்களில் எழும் நேரத்திற்கே எழவேண்டும். அப்படி இல்லாது வழமைக்கு மாறாக நீண்ட நேரம் உறங்கினால் பாடசாலை ஆரம்பமானதும் குறித்த நேரத்தில் எழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும். நீண்ட நேர நித்திரை உங்களில் உள்ள சுறுசுறுப்பை இல்லாது செய்து சோம்பேறித்தனத்தை அதிகரிக்கச் செய்துவிடும்.

## படிப்பை மறக்க வேண்டாம்

பாடசாலை விடுமுறைதானே என்று புத்தகங்களை ஒரு மூலையில் போட்டுவிட்டு படிப்பை மறந்துவிட வேண்டாம். அவ்வாறு செய்தால் உங்கள் சிந்தனை படிப்பில் இருந்து விலகி ஒருவகை வெறுப்பு நிலைக்குள்ளாகிவிடும். அதனால், விடுமுறை காலத்திலும் குறிப்பிட்ட நேரத்தை கற்றல் நடவடிக்கைகளிலும் புத்தகங்களை வாசிப்பதிலும் வீட்டு வேலைகளைச் (Home Work) செய்வதிலும் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

## மன உளைச்சலில் இருந்து விடுபட

இந்த விடுமுறை காலத்தில் ஓரிரு தினங்களாவது உங்கள் உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்கி வருவது நல்லது. அவ்வாறு செய்யும்போது உங்கள் உள்ளத்திற்கு ஒருவகை நிம்மதியும் மனமகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. இதனால், மன அழுத்தங்களில் இருந்து மீளவும் முடியும். இவ்வாறு உறவினர் வீடுகளில் தங்குவதற்காக செல்லும்போது முடியுமானால் பாடப்புத்தகங்களையும் கையோடு எடுத்துச் செல்லுங்கள். விடுமுறை காலத்தில் இன்னொரு நடவடிக்கையாக உங்கள் பெற்றோரின் அனுமதியுடன் பாடசாலை நண்பர் ஒருவரை உங்கள் வீட்டுக்கு அழைத்து சில நாட்கள் உங்களுடன் தங்க வைத்துக் கொள்ளலாம். அப்போது அந்த நண்பருடன் வீட்டில் இருந்து கொண்டே பாடசாலையில் கற்றவைகளை மீளக் கற்கலாம்.

## தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் குறையுங்கள்

பாடசாலை விடுமுறை என்றவுடன் சில குழந்தைகள் முழு நேரத்தையும் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுகின்றனர். இது மிக மோசமான செயலாகும். நாள் முழுவதும் தொலைக்காட்சி பார்ப்பதில் நீங்கள் ஈடுபட்டால் உங்கள் மனநிலை பாதிப்படைந்து அறிவில் இருந்து தூரமாகும் நிலை உருவாகின்றது. 30 நிமிடங்கள் அல்லது 1 மணித்தியாலத்திற்கு மேல் தொலைக்காட்சியை பார்க்க வேண்டாம். அதுவும் பயனுள்ள அறிவுசார் நிகழ்ச்சிகளாக இருந்தால் நல்லது. வீடுகளில் கணினி உள்ளவர்கள் 'கேம்ஸ்' விளையாடுவதில் நேரத்தை செலவிடுவது வீண் ஆகும்.


## வீட்டு வேலைகள்



விடுமுறை காலத்தில் வீட்டு வேலைகளையும் மறந்துவிட வேண்டாம். பெற்றோருக்கு உதவி செய்தல், சமையல் வேலைகளில் அம்மாவுக்கு உதவி செய்தல் என்பனவும் முக்கியமான செயல்களாகும். நீங்கள் சமையல் பற்றிய அறிவைப் பெறும்போது அது பிற்காலத்தில் உங்களுக்கு கைகொடுக்கக் கூடியதாக அமையும். அதேபோன்று வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவதும் விவேகமான செயலாகும். பாத்திகளை பராமரிப்பது, காய்கறி செய்கையில் ஈடுபடுவது என்பனவும் உங்கள் மனதிற்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் ஏற்படுத்தும் செயல்களாகும்.

## பொது வேலைகள்

விடுமுறை காலத்தில் மட்டுமல்லாது மாலை நேரங்களில் அல்லது அன்றாடம்



குறித்த நேரங்களில் வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்.

அவ்வாறே, நல்ல சமூகப் பணிகளிலும் நீங்கள் ஈடுபடலாம். நண்பர்களுடன் இணைந்து நீங்கள் வாழும் சுற்றுப் புறச் சூழலை சுத்தப்படுத்தும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவது, பொதுமக்களுக்கு உதவும் வகையான பணிகளில் ஈடுபடுவது என்பன மிகவும் நல்ல செயல்பாடுகளாகும்.

## திறன் விருத்தி செயற்பாடுகள்

உங்களில் அபரிதமான திறமைகள் மறைந்துள்ளன. அந்த திறமைகளை வெளியே கொண்டு வருவதற்கு பாடசாலை விடுமுறை நல்ல சந்தர்ப்பமாகும். ஆக்கத்திறன் வேலைகளில் ஈடுபடும் போது உங்களில் மறைந்துள்ள அத்தகைய திறமைகளை வெளியே கொண்டு வரமுடியும்.

## புத்தகங்களை அழகாக வைத்திருத்தல்

உங்கள் புத்தகங்கள் அலங்கோலமாக இருந்தால் அவற்றை அழகுபடுத்தல், மேலட்டை கிழிந்திருந்தால் புதிய அட்டை போடுதல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்ள பாடசாலை விடுமுறை நல்ல சந்தர்ப்பமாகும்.

## விளையாட்டு

விடுமுறை தினங்களில் பகல் முழுவதும் விளையாட்டில் ஈடுபடுவதும் விரும்பத்தக்கதல்ல. விளையாடுவதற்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவேண்டும். குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலங்கள் போதுமானதாகும்.

விளையாடும்போது பாதுகாப்பு குறித்தும் மிக அவதானமாக இருக்க வேண்டும். ஆறு, கடல், குளம், நீர்த்தேக்கங்களுக்கு செல்லும்போது பாதுகாவலருடன் அல்லது பெற்றோருடன்தான் செல்ல வேண்டும். அவ்வாறு சென்றாலும் தெரியாத இடங்களில் இறங்கிக் குளிக்கவோ, நீந்தவோ முற்படக் கூடாது.

காடு, வனாந்தரப் பகுதிகளுக்குச் செல்லும் போது மிருகங்கள், பாம்புகள் விஷ ஜந்துக்களாலும் தீங்கு ஏற்படலாம்.

அதனால், பொழுதுபோக்கு, விநோதம், விளையாட்டு அவசியமாக இருந்தாலும் ஆபத்துகள் ஏற்படாமல் தவிர்த்து செயல்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

அமீர் ஹுஸைசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொனைரே




கரீபியன் தீவுக் கூட்டங்களுக்கருகில் அருபா மற்றும் குரகாவோ தீவுகளுக்கு மத்தியில் பொனைரே அமைந்துள்ளது. இந்நாட்டின் கடற்பகுதி 'சுழியோடிகளின் சுவர்க்கம்' என அழைக்கப்படுகின்றது. உலக மக்களின் உள்ளம் கவர்ந்த உல்லாசப் பயண மையமாகவும் இந்நாடு விளங்குகின்றது. கடற்கரையை அண்மித்து அழகிய நீர்ப்பூங்காக்களையும் இங்கு காணலாம்.

* மொத்த நிலப்பரப்பு : 285 சதுர கிலோமீற்றர்.
* இனம் : ஆபிரிக்கர், கரீப் இந்தியர், ஐரோப்பியர்.
* மொழி : நெதர்லாந்து, பெப்பியாமென்டோ, ஆங்கிலம், ஸ்பானிய மொழி என்பன.
* மதம் : ரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, யூத மதம்.
* நிர்வாகம் : நெதர்லாந்திற்குச் சொந்தமான தீவு.
* நாட்டின் முக்கிய நிர்வாகம் : ஆளுனர் மூலம் பரிபாலிக்கப்படுகிறது.
* அரசின் தலைவர் : பிரதமர்
* நாட்டின் பிரதான வருமானம் : உல்லாசப் பயணத்துறை, பெற்றோலிய சுத்திகரிப்பு, கப்பல் போக்குவரத்துத் துறை, உப்பு என்பன.



இத்தீவில் இந்தியர்களே முதன்முதலாக குடியேறினர். இவர்கள் கி.பி 1000 ஆம் ஆண்டில் வெனிசுவெலாவில் இருந்து இங்கு வந்து குடியேறியதாக கூறப்படுகின்றது. ஐரோப்பியர்கள்முதன்முதலாக 1499 இல் தான் இங்கு வந்துள்ளனர். அடிமை வியாபாரம், தொற்று நோய்கள் என்பன நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

1633 இல் நெதர்லாந்து இனத்தவர்கள் இத்தீவை கைப்பற்றிக் கொண்டனர். 1791 வரை இத்தீவு மேற்கிந்திய ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்குச் சொந்தமாக இருந்தது. 1864 இல் அடிமை வர்த்தகம் முடிவுக்கு வந்ததோடு, நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி அடைந்தது. அதன்பின் 20 ஆம் நூற்றாண்டிலேயே நாடு முன்னேறியது.

நவீன துறைமுகம் மற்றும் வசதிகள் நிறைந்த நவீன விமானநிலையம் என்பன அமைக்கப்பட்டமை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும் துணையாக அமைந்தன. 20 ஆம் நூற்றாண்டில் பல சந்தர்ப்பங்களில் இந்நாடு சுதந்திரமடைய முயற்சித்தாலும் நெதர்லாந்திடம் இருந்து சுதந்திரம் பெறும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.





# அருபா

உலகில் அழகிய கடற்கரையைக் கொண்ட தீவுகளில் அருபா தீவும் ஒன்று. உல்லாசப் பயணத்துறை நாட்டின் பிரதான வருவாய்த் துறையாக விளங்குகின்றது. அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் இந்நாட்டுக்கு வருகை தருகின்றனர். பாரிய உல்லாச வலைப்பின்னல் காணப்பட்டாலும் அபிவிருத்தி அடையாத பல பகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. அதி வெப்பநிலையைக் கொண்டதாக இவ்வலயம் காணப்படுகின்றது. அதனால், நிலப் பிரதேசமும் வறண்டதாகவே காணப்படுகின்றது.

* மொத்த நிலப்பரப்பு : 75 சதுர கிலோமீற்றர்
* மதம்: ரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, இந்து, முஸ்லிம், யூதமதம்.
* மொழி: நெதர்லாந்து, பெப்பியாமென்டோ, ஆங்கிலம், ஸ்பானியம்.
* நிர்வாகம்: நெதர்லாந்திற்கு சொந்தமான நாடு.
* நாட்டின் தலைவர்: ஆளுனர்
* அரச தலைவர்: பிரதமர்
* முக்கிய கைத்தொழில்: உல்லாசப் பயணத்துறை, போக்குவரத்து வசதிகள் வழங்கல், எண்ணெய் சுத்திகரிப்பு, பொஸ்பேட்.
* முக்கிய வர்த்தக அங்கத்தவர்கள்: அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நெதர்லாந்து, ஜப்பான்.




நீண்ட காலம் முதல் அருபாவில் தென் அமெரிக்காவில் இருந்து வந்த இந்தியர்களே வாழ்ந்தனர். கொலம்பஸ் தலைமையிலான நாடுகாண் பயணிகள் 1499 இல் இத்தீவிற்கு வந்தனர். 1636 இல் நெதர்லாந்து இனத்தவர்கள் நாட்டைக் கைப்பற்றினர். 17 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அவர்களே நாட்டை ஆண்டனர். நாட்டிலுள்ள வளமற்ற மண் அதன் பொருளாதார வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

1805 இல் பிரித்தானியர் இந்நாட்டிற்கு வந்தனர். 1929 இலிருந்து நாட்டின் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி காணத் தொடங்கியது.

# குரகாவோ



கரீபியன் தீவுக் கூட்டத்தின் மற்றொரு தீவு குரகாவோ ஆகும். முருகை கற்பாறைகள் நிறைந்த கடலும் கடற் கரையும் நாட்டின் சிறப்பம்சமாகும். இங்குள்ள மக்கள் எப்பொழுதும் உல்லாசமாக வாழவே விரும்புகின்றனர்.




திவ்-திவ் என அழைக்கப்படும் இந்நாட்டுக்கே தனித்துவமான தாவர வகையொன்று இங்குண்டு. தலைநகரமாக விலாம்ஸ்டேட் விளங்குகின்றது.

* மொத்த நிலப்பரப்பு : 171 சதுர கி.மீற்றர்.
* இனப்பிரிவு : ஆபிரிக்க இனத்தவர், ஐரோப்பியர், கலப்பின ஆபிரிக்கர், நெதர்லாந்துஇனத்தவர்.
* மொழி : நெதர்லாந்து மொழி, பெப்பியாமென்டோ, ஆங்கிலம், ஸ்பானிய மொழி.
* மதம் : ரோமன் கத்தோலிக்கம், மெதடிஸ் சபை, அங்கிலிக்கன் சபை, யூத மதம்.
* ஆட்சி : நெதர்லாந்து அரசுடன் இணைந்த ஆட்சி.
* நிர்வாகம் : நாட்டின் நிர்வாகத் தலைவராக ஆளுனர் காணப்படுகிறார். இவர் நெதர்லாந்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.
* ஆட்சித் தலைவர் : பிரதமர்
* முக்கிய கைத்தொழில் : எண்ணெய் சுத்திகரிப்பு, உல்லாசப்பயணத்துறை, பொஸ்பேட்.
* பிரதான வர்த்தக நாடுகள் : ஐ.அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், வெனிசுவெலா, மெக்ஸிகோ.

குரகாவோ தீவில் பெரும்பாலும் இந்தியர்களே வாழ்ந்தனர். முன்னைய காலங்களில் அடிமை வியாபாரம் இத் தீவெங்கும் பரவிக் காணப்பட்டது. அவ்வாறே, அக்காலகட்டங்களில் மனிதப் படுகொலைகள் அதிகரித்திருந்தமையால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்பட்டு அது தீவெங்கும் பரவி, அதன் காரணமாக சனத்தொகை விரைவாக வீழ்ச்சியடைந்தது. 1526 இல் அடிமை வர்த்தகம் முடிவுக்கு வந்தது. 1642 இல் இவ் அரசு நெதர்லாந்தின் குடியேற்ற நாடாகியது.



இத்தீவில் கனிய எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக பொருளாதாரத்தில் நாடு மிக வேகமாக வளர்ச்சியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகவும் ஈரலிப்பான நகரம்

**உலகிலேயே மிகவும் ஈரலிப்பான நகரம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? அதுதான் செராபுஞ்சி (Cherrapunji). இந்தியாவின் மொகலாய (Meghalaya) பிராந்தியத்தின் கிழக்கு 'காசி' மலைகள் மாவட்டத்திலேயே (Khasi Hills district) இச்சிறிய நகரம் அமைந்துள்ளது. இந்நகரத்தின் சனத்தொகை (2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில்) 10,086 என கணக்கிடப்பட்டுள்ளது. செராபுஞ்சி நகர மக்களை 'காஷீஸ்' என்று அழைக்கின்றனர். இயற்கை அம்சங்களைக் கொண்டுள்ள இந்த அழகிய நகரம் சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்குரிய இடமாகவும் உள்ளது.**

## பெயர் மாறிய விதம்

இன்று இந்த நகரத்தினை செராபுஞ்சி என்று அழைத்தாலும் முன்னர் இந்நகரத்தினை 'சோராய்' என்றே அழைத்தனர். ஆங்கிலத்தில் அதனை 'ச்சூரா' என்று உச்சரித்தனர். எவ்வாறாயினும், இந் நகரத்தினை அதன் பழைய பெயரில் அழைப்ப தற்கு அந்நகரத்தினை நிர்வகிக்கும் மொகலாய மாநில அரசு தீர்மானித்துள்ளது. வருடம் முழுவ தும் கடும் மழை பெய்தாலும் செராபுஞ்சி மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் பரிதவிக்கின்றனர். தண்ணீருக்காக பல மைல்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதிகமான மழை வீழ்ச்சி இருந்த போதிலும் மரங்கள் வெட்டப்படுவதனால் தண்ணீர் தேங்குவதற்கு இங்கு வழியில்லை. அத்துடன் நீர்ப்பாசன திட்டங்களைப் பேணவும் இங்கு வழிமுறைகள் இல்லை.




## அமைப்பு

செராபுஞ்சி நகரம் இந்தியா-பங்களாதேஷ் எல்லைக்கு அருகில், தென் பகுதியில் அமைந்துள்ளது. வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்கங்கள் முதலில் செராபுஞ்சி மலை முகடுகளையே தழுவுகின்றன. இவ்வாறு பெறப்படும் மழை வீழ்ச்சி மரங்கள் வெட்டப் பட்ட வறண்ட நிலங்களில் வீழ்வதனால் அந்நிலங்கள் மழைநீரை விரைவில் உறிஞ்சிக் கொள்கின்றன.மேலும், மழை நீரினை சேகரிக்க சரியான திட்டமிடல்கள் இன்மையினால் மலை அடிவாரங்களை நோக்கி நீர் வேகமாக வடிந்தோடும். இதனால் மழைநீர் பயனின்றி வீணடைந்து செல்கின்றது.

## காலநிலை

வருடாந்தம் செராபுஞ்சி நகருக்கு 11,430 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. செராபுஞ்சி நகரத் திற்கு அடுத்ததாக மொகலாய மாநிலத்தின் 'மவுசின்ராம்' நகரம் ஈரலிப் பான நகரம் என்ற அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. இதற்கு அடுத்ததாக ஹவாய் தீவுகளின் கவ்வா தீவின் 'வை ஏல் ஏல்' நகரம் இடம் பெறு கின்றது. செராபுஞ்சி நகருக்கு வடமேல் மற்றும் தென்மேற்கு பருவ மழை கிடைக்கின்றது. இதனால், வருடம் முழுவதும் பருவ மழை நீடித் திருக்கின்றது. 4,500 அடி உயரத்தில் 'காசி' மலைச்சிகரத்தில் வங்காள விரிகுடாவிலிருந்து வீசும் காற்றுக்கு முகம் கொடுக்கும் வகையில் செராபுஞ்சி நகரம் அமைந்துள்ளது. வங்காள விரிகுடாவிலிருந்து வரும் தென்மேற்குப் பருவ மழை 'கங்கை' நதியின் கணவாயின் ஊடாக இந்தியாவுக்குள் பிரவேசிக்கின்றது. காலநிலை அறிக்கைகளின் படி ஜூன் மற்றும் செப்டெம்பர் மாதங்களுக்கு இடையிலான காலத் தில் மலைச் சிகரங் களுக்கு மேல் ஏற்படும் மேகங்களினால் அதிகள வான மழைவீழ்ச்சி கிட்டுகின்றது. குளிர் காலத்தில் வடமேல் பருவ மழைவீழ்ச்சி கிடைப்பதுடன் அதிலி ருந்து கிடைக்கும் நீர் பிரம்மபுத்திரா நோக்கிச் செல்கின்றது.



## கின்னஸ் சாதனை

செராபுஞ்சி நகரம் 'கின்னஸ்' புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது. வருடத்தில் கிடைக்கும் அதிக மழைவீழ்ச்சி மற்றும் ஒரு மாதத்தில் கிடைக்கும் அதிக மழை வீழ்ச்சி போன்ற இரு காரணங்களுக்காகவுமே இந்நகரம் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. 1860 ஓகஸ்ட் முதல் 1861 ஜூலை மாதம் வரையில் கிடைத்துள்ள மழைவீழ்ச்சி 22,987 மில்லி மீற்றரா கும். இது வருடம் ஒன்றில் பெறப்பட்ட அதிகளவான மழைவீழ்ச்சியா கும். 1861 ஜூலை மாதத்தில் மட்டும் கிடைத்த மழைவீழ்ச்சி 9299.96 மில்லி மீற்றராகும்.

**-பிரியதர்ஷினி**


## விஜய் சந்தா விபரம்

**'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

**பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்**
***(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)***

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
தொ.பே.இல: ..................................................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

........................................ ........................................
கையொப்பம் திகதி

**உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக செயற்பாடுகள்


உலகின் முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதைகள்

**இயற்கை, மனித சமுதாயத்திற்கு அளவிட முடியாத பல கொடைகளை வழங்கியுள்ளது. அவற்றில் ஒன்று கடலும் கடல் சார்ந்த வளங்களுமாகும். எமது நாடு ஒரு தீவாகையால் இவ்வளங்கள் எமக்கு நிறையவே கிடைத்துள்ளன. அவ்வளங்களின் மூலமும் மனித முயற்சியின் மூலமும் உருவாகும் கட்டமைப்பே துறைமுகமாகும்.**

கிழக்கு, மேற்கு நாடுகளுக்கிடையிலான பிரதான கடல் மார்க்கத்திற்கு அண்மையில் இருப்பது, விரைவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு மத்தியில் அமைந்திருப்பது, வருடத்தின் சகல பருவ காலங்களிலும் கப்பலில் பொருட்களை ஏற்றி இறக்கக்கூடிய சிறந்த காலநிலை, கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு ஏற்ற சிறந்த கடற்கரை, உயர்தரத்தில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட துறைமுக கட்டமைப்புகள் போன்ற விடயங்கள் எமது நாட்டின் துறைமுகங்களுக்குரிய தனிச் சிறப்புக்களாகும்.

## துறைமுக கட்டமைப்பு

துறைமுகமானது கப்பலில் இருந்து கரையில் அமைந்துள்ள மேடைக்கு பொருட்களை இறக்கவும், கரையில் இருந்து கப்பலுக்கு பொருட்களை ஏற்றுவதற்குத் தேவையான வசதிகளைக் கொண்டதுமான ஓர் இடமாகும். கப்பல்கள் நங்கூரம் இடுவதற்குரிய ஆழமான நங்கூர நிலையங்கள், சேமிப்புக்குதம், பாரம்தூக்கிகள், களஞ்சியசாலை, கப்பல் பொருட்களை வைத்திருக்கக்கூடிய விசாலமான இடவசதி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பல்வேறு சேவை வசதிகள் என்பனவற்றைக் கொண்ட தொகுதியே துறைமுகமாகும்.

துறைமுகத்தில் இருந்து நாட்டிற்குள் இறக்குமதிப் பொருட்களைக் கொண்டு செல்லவும் தேசிய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக துறைமுகத்திற்கு கொண்டு வரவும் தேவையான உகந்த போக்குவரத்துப் பாதைகள் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஒரு துறைமுகத்தின் முக்கியத்துவம் அந்நாட்டின் பொருளாதாரத்தில் அது வகிக்கும் பங்களிப்பைப் பொறுத்தே இருக்கிறது.

## துறைமுக அபிவிருத்தி மூலம் கிடைக்கும் பயன்கள்

ஒரு நாட்டின் துறைமுகம் அபிவிருத்தி அடைவதால் அந்நாட்டு மக்களினதும் முழு நாட்டின் தேசிய வளர்ச்சியிலும் பெரும் தாக்கம் ஏற்படுகிறது.

## கொள்கலனின் தோற்றம்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது பொருட்களை விரைவாகவும் இலகுவாகவும் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் பொருட்களுக்கு ஊறு விளையாமல் இருக்கவும் மிகவும் பொருத்தமான முறையாக பொருட்களை பாரிய பெட்டிகளில் அடைத்து கொண்டு செல்லும் முறையே காணப்பட்டது. இந்த முறையை ஐ.அமெரிக்க வர்த்தகரான மெட்சன் (Matson) கண்டுபிடித்தார். படிப்படியாக இந்த முறை வளர்ச்சி அடையலாயிற்று.

1960 இல், 20 அடி நீளமும் 8 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்ட அளவுடைய இத்தகைய கொள்கலன்களை உருவாக்க ஆரம்பித்தனர். இந்த கொள்கலனில் (பெட்டியில்) 20.3 தொன் நிறையுள்ள பொருட்களையும் 40 அடி நீளமான கொள்கலனில் 30.5 தொன் நிறையுள்ள பொருட்களையும் அடக்கலாம்.

பொருட்களை ஏற்றும் பெட்டி அல்லது கொள்கலன் (Container) காரணமாக உலக கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகளில் புரட்சிகர மாற்றங்கள் பல ஏற்பட்டன. 1960 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொள்கலன் மூலம் பொருட்களை கொண்டு செல்லும் அல்லது கொண்டு வரும் வாய்ப்பு கொழும்பு துறைமுகத்திற்கும் கிடைத்தது.

## ஆரம்பகால நடைமுறை

ஆரம்ப காலத்தில் பாய் மரக்கப்பல் மூலமே பொருட்கள் கொண்டு வருவதும் கொண்டு செல்வதும் நடைபெற்றன. பாய் மரக்கப்பல்களில் இருந்து சிறிய படகுகளுக்கேற்றி தரைப்பகுதிக்கு அருகில் படகுகள் பொருட்களை எடுத்து வரத் தொழிலாளர்கள் அவற்றை முதுகில் சுமந்து கரைக்குக் கொண்டு வந்தனர். இவ்வாறே இலங்கையில் வாசனைத் திரவியங்கள் யானைத் தந்தங்கள் உள்ளிட்ட ஏனைய கப்பல் பொருட்கள் பாய்மரக் கப்பல்கள் மூலம் ஏற்றி இறக்கப்பட்டன. திரவநிலையான பொருட்கள் பலகையால் உருவாக்கப்பட்ட பீப்பாய் மூலம் கொண்டு செல்லப்பட்டன.

## இன்றைய நிலை

ஆரம்பத்தில் பாய் மரக்கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்ட பொருட்கள் பின்னர் நிலக்கரியால் இயங்கும் கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்டன.கனிய எண்ணெய்யை பயன்படுத்த ஆரம்பித்த பின் படிப்படியாக கப்பல்துறை வளர்ச்சியடைந்தது. அத்தோடு அப்பயணக்கப்பல் அதில் அடங்கியுள்ள பொருட்களின் வகைகளை பொறுத்து மாறுபடும். அவையாவன:-


கொழும்புத் துறைமு

- கொள்கலன் கப்பல் - (Container Vessels)
- வாயுக்கள் கொண்டு வரும் கப்பல் - (Gas Carriers)
- பாரிய எண்ணெய் கப்பல்கள் - (Tankers)


எனப் பெயரிடப்பட்டுள்ளன. சில பாரிய எண்ணெய் கப்பல்களின் விசாலமான தன்மை காரணமாக அவை உலகின் சில துறைமுகங்களில் வந்து நங்கூரமிட முடியாத நிலை காணப்படுகின்றது.

## பொருட்களின் வகைகள்

துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கையானது அந்தந்தக் கப்பல்களின்-பொருட்களின் வகைகளைப் பொறுத்து மாறுபடும். அவையாவன:-

- கொள்கலனாக்கப்பட்ட சரக்கு- Cantainerised Cargo
- தொகையை அறுக்கும் சரக்கு - Break Bulk
- உலர் சரக்கு - Dry Bulk
- திரவ மொத்த சரக்கு - Liquid Bulk

'கொள்கலனாக்கப்பட்ட சரக்கு' என அழைக்கப்படுவது கொள்கலன் மூலம் கொண்டு வரப்படும் பாரிய அளவு பொருட்களின் தொகை. தொகை அறுப்புச் சரக்கானது சாதாரண படகு உணவாகும். அவை பாரம்பரிய சரக்காகும். தாங்கிகளில் களஞ்சியப்படுத்தக் கூடியவை சாக்குகளிலும் பெட்டிகளிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளவையும் இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைமுக சேவைகள்

* குளிரூட்டி, சாதாரண மற்றும் உபகரணம் எனும் முக்கிய மூன்று வகையின் கீழ் சேவை நடைபெறுகின்றது. அவையாவன:- சாதாரண கப்பல் சரக்கு,சீமெந்து,பசளை மற்றும் மா முதலிய சம்பிரதாய கப்பல் சரக்கு நடவடிக்கை.
* வாகனப் போக்குவரத்து கப்பல் நடவடிக்கை.
* நிலக்கரி நடவடிக்கை.
* பெரிய மீன் வகைகளுக்கான கப்பல் வசதிகளை வழங்கல்.
* கடற்சேவை வழங்கல், இதன் மூலம் காய்கறி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கல், நீர் மற்றும் எரிபொருள் விநியோகம்.
* கப்பல் சேவையாளர் பரிமாற்றம் செய்தல்.
* கப்பல்களை பழுது பார்ப்பதற்காக Dry Dock Facility வசதிகளை வழங்கல்.


ழும்புத் துறைமுகத்தில் சில கொள்கலன்கள்


கிரேனட் பாரம் தூக்கி மூலம் கப்பலில் இருந்து கொள்கலன்களை இறக்கும் விதம்


கப்பல் இல்லாத சந்தர்ப்பத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிரேனட் பாரம் தூக்கி


கப்பல்களை கட்டி வைக்கும் தூண்


கப்பல்களுக்கு நீர் விநியோகிக்கும் சிறிய இயந்திரம்


சீமெந்துக் களஞ்சியம்


கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல் மூலம் கொண்டு வரப்படும் சீமெந்து போக்குவரத்து


துறைமுகத்திற்கு கப்பல்கள் பிரவேசிக்கும் பிரதான வாயில்

## துறைமுக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சில பிரதான பிரிவுகள்

* **ற்பாட்டுப் பிரிவு**
து றைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு சரக்குகளை ஏற்றி இறக்கும் விடயங்கள் குறித்து ஆராய்தல்.
* **பொறியியல் பிரிவு**
பொருட்களை இறக்குதல், ஏற்றுதலோடு சம்பந்தப்பட்ட சகல இயந்திரங்களையும் துறைமுகத்தின் ஏனைய இயந்திரங்களையும் உரிய நேரத்தில் இயங்கும் நிலையில் வைத்திருத்தல். சகல கட்டடங்களையும் புனர்நிர்மாண நிலையில் வைத்திருத்தல்.
* **திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு**
துறைமுகத்திற்குரிய நீர்பரப்பு மற்றும் ஏனைய நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபடல்.
* **ஒப்பந்தம் (Contract) மற்றும் நிர்மாணப் பிரிவு**
ஏனைய துறைமுகத்தில் இருந்து வரும் ஒப்பந்த நடவடிக்கைகளில் ஈடுபடல்.
* **மின்சார, இலத்திரனியல் பொறியியலாளர் பிரிவு**
மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப நடவடிக்கைகள், மின்சாரத் தொடர்பு நடவடிக்கைகளை பொறுப்பேற்று செயல்படுத்தல்.
* **வ கல் அல்லது விநியோகப் பிரிவு**
துறைமுகத்திற்குத் தேவையான பொருட்களை 'டெண்டர்' முறையில் வெளிநாட்டில் இருந்தோ, தமது நாட்டிலிருந்தோ விநியோகித்தல்.
* **நிதிப்பிரிவு**
துறைமுகத்திற்கு சேர வேண்டிய சகல வருமானங்களையும் சேகரித்தல், செலவுகளை நிர்வகித்தல், சம்பளக் கொடுப்பனவு, கடன் வழங்கல், ஏனைய கொடுப்பனவுகளை வழங்கல்.
* **கடல் பிரிவு**
துறைமுகத்திற்கு வரும் மற்றும் வெளியேறும் சகல கப்பல்களுக்கும் மாலுமிகளின் சேவையை வினைத்திறன் மிக்கதாக ஒழுங்குபடுத்தி வழி நடத்துதல், துறைமுக தீயணைப்புப் படையினரை நிர்வகித்தல்.
* **பணியாளர் குழுப் பிரிவு**
சேவையாளர்களின் தனிப்பட்ட கடிதக் கோவைகளை பேணல், பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்.
* **நலன்புரி மற்றும் தொழிலாளர் தொடர்பாடல் பிரிவு**
துறைமுகத்தில் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் தேவையான சகல நலன்புரி நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுதல் குறித்து அவதானித்தல்.
* **வர்த்தகப் பிரிவு**
ஏற்றுமதி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் சகல கப்பல் சரக்குகளையும் சுங்க அனுமதியுடன் குறித்த பொருட்களுக்குரிய உரிமையாளர்களுக்கு முறையாக கையளித்தல்.
* **பாதுகாப்புப் பிரிவு**
துறைமுகத்தின் சகல ஊழியர்களுக்கும், கட்டடங்களுக்கும் இயந்திரங்களுக்கும், ஏற்றி இறக்கி கொண்டு வரப்படும் சகல பொருட்களுக்கும் பாதுகாப்பு வழங்கல்.
* **தகவல் தொழில்நுட்பப்பிரிவு**
சகல கணினி கட்டமைப்பிற்கும் இலத்திரனியல் செயல்பாட்டிற்கும் பரிவர்த்தனைக்கும் பொறுப்பாக இருப்பதோடு நடவடிக்கைகளை அவதானித்தல்.
* **உட்கட்டமைப்பு வினைத்திறன் பிரிவு**
துறைமுக அதிகார சபையில் நடக்கக்கூடிய சகல வருமானம் குறித்து அவதானித்தல்.
* **வைத்தியப் பிரிவு**
24 மணி நேர சேவையை துறைமுக பணியாளர்களுக்கு வழங்கல். ஏதேனும் ஆபத்துக்கள்,விபத்துக்கள், சுகயீனம், அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கும் பணியாளர்களுக்கு வைத்திய சேவையைபெற்றுக்கொடுத்தல்.
* **சட்டப்பிரிவு**
துறைமுகத்தினுள் நடைபெறும் நீதித்துறைசார் நடவடிக்கைகளை அவதானித்தல்.
* **பயிற்சிப் பிரிவு**
துறைமுக பணியாளர்களுக்கான சகல நவீன விடயங்கள் குறித்த அறிவையும் அதற்கான பயிற்சியையும் வழங்கல்.



-ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனப் பொன்மொழிகள்

- தந்தையின் கோபத்தைக் கண்டு மகன் அஞ்சுவதில்லை. தந்தையின் மௌனத்திற்கே அஞ்சுவான்.
- பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பது நல்ல மனிதனின் அடையாளமாகும்.
- பேசுகின்றவர் அறிந்ததில்லை. அறிந்தவர் பேசுவதில்லை.
- அதிர்ஷ்டம் துணிச்சல் உள்ளவர்கள் பக்கமே இருக்கும்.
- நல்ல வார்த்தைகள் முத்து மாலையைப் போன்றவை.
- ஒரு வினாடியில் செய்யும் தவறு முழு வாழ்க்கையையும் நாசமாக்கி விடும்.
- அடுத்தவருக்குச் செய்த உதவியை மறந்து விடுங்கள். உங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தை நினைத்துப் பாருங்கள்.
- கோபத்தின் போது பொறுமையைக் கைக்கொண்டால் நூறு வருட கவலையில் இருந்து தப்பி விடலாம்.

**தொகுப்பு:** பாத்திமா மிஸ்னா நஸீர், பலாங்கொடை.

## பெர்னாட் ஷாவின் பதில்

பெர்னாட் ஷா பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து ''சொர்க்கத்துக்குப் போக விரும்புகின்றவர்கள் அனைவரும் எழுந்து நில்லுங்கள்'' என்று கூறினார்.

உடனே பெர்னாட் ஷாவைத் தவிர மற்ற எல்லா மாணவர்களும் எழுந்து நின்றார்கள்.

அதைப் பார்த்து ஆச்சரியமடைந்த ஆசிரியர் பெர்னாட் ஷாவிடம் ''ஏன், உனக்கு மட்டும் சொர்க்கத்துக்குப் போக விருப்பமில்லையா?'' என்று கேட்டார்.

உடனே பெர்னாட் ஷா ''விருப்பம்தான். ஆனால், இவர்களெல்லாம் சொர்க்கத்துக்குப் போன பின்பு அது சொர்க்கமாகவா இருக்கும்?'' என்றார்.

அங்கிருந்த ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் பெர்னாட் ஷாவின் பதிலைக் கேட்டு நகைச்சுவை மழையில் நனைந்து தங்களை மறந்து சிரித்தனர்.

**தொகுப்பு : எம்.என்.சாகிரா, பது/தமிழ் மகளிர் ம.வித்., பதுளை.**



## கிளியின் உபதேசங்கள்

ஒரு வியாபாரி கிளி ஒன்றை மிகவும் அன்பாக வளர்த்து வந்தான். ஓய்வு நேரத்தில் கிளியுடன் அன்பாகப் பேசி தனது ஓய்வையும் கழித்தான். எனினும், கிளி தினமும் தன்னைக் கூட்டிலிருந்து வெளியே விடச் சொல்லி வியாபாரியைக் கேட்டது. வியாபாரி, ''உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. அதனால், நான் உன்னை வெளியே விட மாட்டேன்'' என்று கூறிவிட்டு சென்று விடுவான்.

இவ்வாறு இருக்கையில் கிளி ஒருநாள் வியாபாரியை அழைத்து ''என்னை நீ விடுதலை செய்தால் நான் உனக்கு மிகவும் பிரயோசனமான மூன்று உபதேசங்களைக் கூறுவேன். அது உன் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக



அமையும்'' என்றது. கிளி கூறியதைக் கேட்ட வியாபாரி, ''கிளி நமக்கு முக்கியம்தான் எனினும் இக்கிளியை விடுவிப்பதன் மூலம் அதன் உபதேசத்தினால் பணம், பொருள் என்பன கிடைத்துவிட்டால் இதே மாதிரி ஒரு கிளியல்ல. நூறாயிரம் கிளிகள் வாங்கலாம்'' என்று எண்ணிக் கிளியை கூட்டிலிருந்து விடுவித்தான். கிளி வியாபாரியின் கையில் நின்று கொண்டு ''எனது முதல் உபதேசம் எப்போதும் இல்லாமல் போன பொருளைப் பற்றி எண்ணாதே!'' என்றது. இதைக் கேட்ட வியாபாரி, ''இதென்றால் பிரயோசனம் இல்லாத உபதேசம்'' என்றான். பின்னர் கிளி பறந்து சென்று கூரையின் மேல் நின்று ''எனது இரண்டாவது உபதேசம், ''நீ காதால் கேட்பதையெல்லாம் நம்பி விடாதே!'' என்றது. அதற்கு வியாபாரி இதெல்லாம் எனக்குத் தெரிந்த உபதேசம். எனக்குத் தெரியாத உபதேசம் ஒன்றைச் சொல்'' என்றான். அதற்குக் கிளி ''உனக்குத் தெரியாததொன்றுதான் எனது வயிற்றில் இரண்டு இரத்தினக் கற்கள் உள்ளதென்பது'' என்றது. இதைக் கேட்ட வியாபாரி ஆச்சரியப்பட்டு ''என்ன? உனது வயிற்றில் இரண்டு இரத்தினக்கற்கள் உள்ளனவா? நான் எவ்வளவு முட்டாள். உன்னைப் பறக்க விட்டுவிட்டேனே. இதை நினைத்து எனது வாழ்நாள் முழுதும் நான் கவலைப் படுவேன்'' என்றான். இதை அடுத்து கிளி ''எனது மூன்றாவது உபதேசம் உனக்குத் தேவையில்லையா?'' என்று கேட்டது. அதற்கு வியாபாரி ''அதென்ன அது?'' என கோபத்துடன் கேட்டான்.



அதற்குக் கிளி ''நான் உனக்கு முதன்முதல் கூறிய... இல்லாமல் போன பொருளைப் பற்றி எண்ணாதே! என்ற உபதேசம். எனினும் நீ இப்போது கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இரண்டாவதாக நான் கூறிய காதால் கேட்பதையெல்லாம் நம்பாதே! என்று கூறிய உபதேசம் எனினும், எனது வயிற்றில் இரண்டு இரத்தினக்கற்கள் இருப்பதாக நான் கூறியதை நீ நம்பினாய். எனது வயிற்றில் இரண்டு இரத்தினக்கற்கள் இருந்திருப்பின் நான் இறந்து போயிருப்பேனல்லவா? அது சரி எனது மூன்றாவது உபதேசம் இதுதான். எதை யாவது கேட்கும் போது காதால் மட்டுமன்றி மனதாலும், மூளையாலும் அதைக் கிரகித்துக் கொண்டு கேட்க வேண்டும்'' என்பதாகும் எனக் கூறிவிட்டு கிளி சந்தோஷமாகப் பறந்து சென்றது. கிளி கூறிய உபதேசங்களை சரிவர வியாபாரி பின்பற்றி தனது வாழ்க்கையை மிகவும் சிறப்பாக அமைத்துக் கொண்டான்.

**தொகுப்பு:** பாத்திமா ஸப்ரினா நசீர், பலாங்கொடை.



## நல்ல உணவுகள்

நல்ல நல்ல உணவுகள்
நாங்கள் தேடி உண்போம்
தொல்லை தரும் நோய்களை
தூரத்தி நாங்கள் விரட்டுவோம்.

சுத்தமான நீரையே
நித்தம் நாங்கள் அருந்துவோம்
மிக்க நல்ல பால் வகை
மிக விரும்பிப் பருகுவோம்.

அரிசிச் சோறு பழவகை
அரிய நல்ல பண்டங்கள்
விரும்பி நாங்கள் உண்ணுவோம்
வீட்டுத் தோட்டம் செய்திடுவோம்.

புத்தம் புதிய காய்கறிகள்
நித்தம் வளரும் கீரை வகை
சத்து மிக்க உணவு வகை
சமைத்து நாங்கள் உண்ணுவோம்.

சுத்தம் பேணி வாழ்ந்திட்டால்
சுகமாய் என்றும் வாழ்ந்திடலாம்
சுத்தம் சுகம் தரும் என்றே
நித்தம் நினைவில் கொள்வோமே.

எம்.எம்.எப்.அஸ்ரினா, பதுரியா மத்திய கல்., மாவனல்லை.

## இப்படியும் சில....

- நூலகங்களில் இருந்து அதிகமாகத் திருடப்பட்ட நூல் - 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகம்.
- நத்தைகள் பிறக்கும் போதே ஓட்டுடன் தான் பிறக்கின்றன.
- வௌவால்கள் எப்போதும் குகையை விட்டு வெளியே வரும்போது இடது பக்கம்தான் திரும்பும்.
- கெட்டுப் போகாத ஒரே ஒரு உணவுப் பதார்த்தம் தேன்.
- ஆங்கில அகராதியில் Orange, Yellow, Silver இவை மூன்றுக்கும் ஒப்பான ஓசையுடைய சொற்களே கிடையாது.
- தட்டச்சு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்ட முதல் நாவல் - டொம் சாயர் (Tom Sawyer)
- 'சார்லி சப்லின்' தன்னைப் போல் மாறுவேடம் அணியும் போட்டியில் யாருக்கும் தெரியாமல் கலந்து கொண்டார். ஆனால், அவருக்கு மூன்றாவது பரிசுதான் கிடைத்தது.
- அல்பேனியாவில் தலையசைத்தால் 'இல்லை' என்றும், கை கொடுத்தால் 'ஆம்' என்றும் அர்த்தமாம்.

எம்.உமாகாயத்திரி, நு/ஊவா விஞ்ஞான கல்., ஹாலி-எல.

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:......................................

முகவரி:......................................

......................................

பாடசாலை:......................................

வகுப்பு:......................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2079

என்.கிஷாந்த்,
தரம் - 3,
எட்டியாந்தோட்டை த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.



அங்.இல : 2080

ச.விதேஸ்,
தரம் - 5B,
முகத்துவாரம் இந்துக் கல்.,
கொழும்பு-15.



அங்.இல : 2081

சி.நிரோஷன் மனோகரன்,
தரம் - 7B,
புனித மிக்கேல் தே.பா.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2082

செ.கோபிரதன்,
தரம் - 7A,
மத்திய கல்லூரி,
புதுக்குடியிருப்பு.



அங்.இல : 2083

க.சகீதன்,
தரம் - 8A,
மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.



அங்.இல : 2084

எம்.ஐ.எம்.பர்ஹான்,
தரம் - 9A,
அஸ்ஹர் ம.வித்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2085

ஆர்.விஜயதாஸ்,
தரம் - 10A,
வட்டவளை த.ம.வித்.,
வட்டவளை.



அங்.இல : 2086

செ.யமுனா,
தரம் - 11,
வேரவில் இ.ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2087

சி.றெக்ஸ் கமில்ட்ரன்,
தரம் - 12,
சித்திவிநாயகர் இ.கல்.,
மன்னார்.



அங்.இல : 2088

கோகிலராணி முத்துவேலு,
தரம் - 13(கலை),
கறுக்காய்த் தீவு ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2089

பா.மகேந்திரன்,
தரம் - 7,
ஹோல்ப்ரூக் த.ம.வித்.,
நுவரெலியா.



அங்.இல : 2090

நாகலிங்கம் தயாகரன்,
தரம் - 13(கலை),
அக்கராயன் வித்.,
கிளிநொச்சி.



கொட்டியாகும்புரையைச் சேர்ந்த பரமசிவன்-புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்டென்லி ஸ்டோபர், தனது நான்காவது பிறந்தநாளை 17.07.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்துவின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் - ப.ரெபேகா)*

தி/கிண்ணியா மத்திய கல்லூரியின் பொன்விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாசாரப் போட்டிகளில், உயர்தரப் பிரிவுகளுக்கான நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நாடகக் குழுவினர், தமது நாடகப் பயிற்சிப் பொறுப்பாசிரியர் அஸ்கர் அவர்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

*(தகவல்-நா.மு.றுஸ்மில், படப்பிடிப்பு-என்.எஃப்.பாரிஸ்)*

விஜய் 'விழா உலா'
த.பெ.என் 2037
கொழும்பு







கைவண்ணங்கள்
த.பெ.என் 2037
கொழும்பு



எம்.எஸ்.யூ.ஃபெளமியா,
தரம் - 8,
எல்லால்லமுள்ள ஸாஹிரா மு.வித்.,
அத்தனகல்லை.



ஏ.டபிள்யூ.எஃப்.ஸுலைஹா,
தரம் - 7B,
கா/ஸாஹிரா தே.பாட.,
கிந்தோட்டை.



எஸ்.தினேஸ், தரம் - 4,
எட்டியாந்தோட்டை
த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.






எம்.ஏ.அறஃபா, தரம் - 5,
அல்-அஸ்ரக் மு.ம.வித்.,
தல்கஸ்பிடிய.



என்.பிரேம்குமார்,
தரம் - 5,
பின்னவளை த.ம.வித்.,
பலாங்கொடை.



றிஸ்லா றிஸான்,
தரம் - 8D,
அல்-கஸ்ஸாலி ம.கல்.,
அடுலுகம.



என்.எஃப்.ஹிம்சானியா,
தரம் - 5,
அல்-அர்ஹம் வித்.,
அட்டாளைச்சேனை.



எம்.அன்ஸாஃப்,
தரம் - 3C,
அல்-அஸ்ஹர் மத்திய கல்.,
திஹாரிய.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்று அப்பாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

තාත්තා: පුතා බල්ලා කෝ ?
புதா, பள்ளா கோ?
அப்பா: மகன், நாய் எங்கே?

පුතා: බල්ලා කූඩුවේ ඉන්නවා තාත්තේ.
பள்ளா கூடுவே இன்னவா தாத்தே.
மகன்: நாய் கூட்டில் இருக்கிறது அப்பா.

තාත්තා: බල්ලා කූඩුවේ නැහැ.
பள்ளா கூடுவே நெஹெ.
அப்பா: நாய் கூட்டில் இல்லை.



බල්ලා එළියට ගිහින්.
பள்ளா எளியட கிஹின்.
நாய் வெளியே போய்விட்டது.

බල්ලාව කූඩුවේ දාන්න.
பள்ளாவ கூடுவே தான்ன.
நாயைக் கூட்டில் போடு.

තාත්තා: නැත්නම් ඌ කාව හරි හපයි.
நெத்னம் ஊ காவஹறி ஹபய்.
அப்பா: இல்லாவிட்டால் அது யாரையாவது கடித்துவிடும்.

පුතා: අක්කේ බල්ලා ගේ දම්වැල කෝ ?
அக்கே பள்ளாகே தம்வெள கோ?
மகன்: அக்கா நாயின் சங்கிலி எங்கே?



අක්කා: බලු කූඩුවේ තිබුණා. බලන්න.
பளு கூடுவே திபுணா. பளன்ன.
அக்கா: நாய்க்கூட்டுக்குள் இருந்தது. பார்.

තාත්තා: ඌව නාවලා කූඩුවට දාන්න.
உவ நாவலா கூடுவட தான்ன.
அப்பா: அதைக் குளிப்பாட்டி கூட்டிற்குள் போடுங்கள்.

පුතා: හොඳයි තාත්තේ. මම බල්ලාව නාවලා කූඩුවට දාන්නම්.
ஹொந்தய் தாத்தே. மம பள்ளாவ நாவலா கூடுவட தான்னம்.
மகன்: நல்லது அப்பா. நான் நாயைக் குளிப்பாட்டி கூட்டிற்குள் போடுகின்றேன்.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: மகன், நாய் எங்கே?
පුතා බල්ලා කෝ ?

i நாய் கூட்டில் இருக்கிறது.
.................................................................

ii நாய் வெளியே போயிருக்கிறது.
.................................................................

iii அக்கா நாயின் சங்கிலி எங்கே?
.................................................................






**Can** எனும் எதிரிடை துணை வினைச் சொல்லை (Modal Auxiliary Verb) மூலவினைச் சொல்லுடன் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட 'வினா' வாக்கியம், 'உடன்பாடு' வாக்கியம் மற்றும் 'எதிர்மறை' வாக்கியம் ஆகிய மூன்று நிலைகளில் உள்ள வாக்கியங்களை ஒன்றுடன் ஒன்று மேலும் ஒப்பிட்டுப் பயில்வோம்.

**குறிப்பு:** Can என்பதற்கு தமிழில் 'இயலும்' எனவும் அர்த்தம் கொள்ளலாம்.

(அ) Can you read?
உன்னால் வாசிக்க முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, I can read.
ஆம், என்னால் வாசிக்க முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, I can not read.
இல்லை, என்னால் வாசிக்க முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

---

(அ) Can they swim?
அவர்களால் நீந்த முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, they can swim.
ஆம், அவர்களால் நீந்த முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, they can not swim.
இல்லை, அவர்களால் நீந்த முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

---

(அ) Can these children sing?
இந்தப் பிள்ளைகளால் பாட முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, these children can sing.
ஆம், இந்தப் பிள்ளைகளால் பாட முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, these children can not sing.
இல்லை, இந்தப் பிள்ளைகளால் பாட முடியாது. (எதிர்மறை)

மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) Can you read this book?
உன்னால் இந்தப் புத்தகத்தை வாசிக்க முடியுமா? (வினா)

(ஆ) Yes, I can read this book.
ஆம், என்னால் இந்தப் புத்தகத்தை வாசிக்க முடியும். (உடன்பாடு)

(இ) No, I can not read this book.
இல்லை, என்னால் இந்தப் புத்தகத்தை வாசிக்க முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can they swim in the river?
அவர்களால் ஆற்றில் நீந்த முடியுமா? (வினா)

(ஆ) Yes, they can swim in the river.
ஆம், அவர்களால் ஆற்றில் நீந்த முடியும். (உடன்பாடு)

(இ) No, they can not swim in the river.
இல்லை, அவர்களால் ஆற்றில் நீந்த முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can these children sing new songs?
இந்தப் பிள்ளைகளால் புதிய பாடல்களைப் பாட முடியுமா? (வினா)

(ஆ) Yes, these children can sing new songs.
ஆம், இந்தப் பிள்ளைகளால் புதிய பாடல்களைப் பாட முடியும். (உடன்பாடு)

(இ) No, these children can not sing new songs.
இல்லை, இந்தப் பிள்ளைகளால் புதிய பாடல்களைப் பாட முடியாது. (எதிர்மறை)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# கணினி பாவனையினால் கையெழுத்து திறமை குறைந்து வருகின்றதாம்...!



கணினியின் பாவனை அதிகரித்து வருவதன் காரணமாக பேனையினால் எழுதும் திறமை குறைவடைந்து வருவதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி அங்கு பேனையினால் அழகாக, நேர்த்தியான கையெழுத்தில் எழுதுவோரின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைவடைந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

பேனையினால் எழுதுவதற்குப் பதிலாக கணினி 'டைப் செட்டிங்' முறையில் அவற்றை கையாள்வதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பேனையினால் எப்படி எழுதுவது என்பது கூட அநேகமானோருக்குத் தெரியாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக மாணவர்களின் திறமையானது அவர்களது கையெழுத்தின் நேர்த்தியைக் கொண்டும் மதிப்பிடப்படுகின்றது. அவ்வாறே, நேர்முகத் தேர்வாளர்கள் ஊழியர்களை தேர்வு செய்யும் போது அவர்களின் நேர்த்தியான கையெழுத்தைக் கொண்டு அவர்களை எடைபோடுகின்றனர். எனவே, கையெழுத்தில் திறமை குறைவடைந்து வருகின்றமை ஒரு பாரதூரமான விடயமாகவே கருதப்படுகின்றது.

இவற்றை கருத்தில் கொண்டு அவுஸ்திரேலியாவில் தமது பிள்ளைகள் கணினி பயன்படுத்துவதை குறைந்து கையெழுத்தில் பயிற்சி வழங்குவதில் பெற்றோர் பெரிதும் ஆர்வம் காட்டத் தொடங்கியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சீனாவில் வெள்ளம்

சீனாவில் 'யுனென்' என்ற பகுதியில் ஏற்பட்ட கடும் மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 20 பேர் கொல்லப்பட்டதுடன் பத்துப் பேர் காணாமல் போயுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



இந்த மழை வெள்ளத்தினால் எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளதுடன் விவசாயக் காணிகளும் பெருமளவில் அழிவுற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி வெள்ளத்தின் காரணமாக 44 மில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

## வெனிசுவெலா-கியூபா நாடுகளின் நட்புறவு





கியூபா-வெனிசுவெலா நாடுகள் தமக்கிடையே நட்புறவு ரீதியிலான பண்டமாற்று வழிமுறையொன்றினை மேற்கொள்வதற்கு இணக்கம் கண்டுள்ளன. இதற்கமைய வெனிசுவெலாவிலிருந்து கியூபாவிற்கு எண்ணெய் வழங்கப்படவுள்ள அதே நிலையில் கியூபாவிலிருந்து வெனிசுவெலாவிற்கு அந்நாட்டின் மிருகக்காட்சிசாலைக்கு மிருகங்களை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதனுடன்,கியூபாவிற்கு மேலதிகமாக மருந்து வகைகளையும் மருத்துவ உபகரணங்களையும் வழங்குவதற்கும் வெனிசுவெலா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நாளொன்றிற்கு வெனிசுவெலா 92,000 எண்ணெய் பெரல்களை கியூபாவிற்கு அனுப்பி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நடைமுறையானது இரண்டு நாடுகளுக்கிடையிலும் உள்ள நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 165

**கேள்வி:** வெனிசுவெலாவிலிருந்து கியூபாவிற்கு நாளொன்றிற்கு எத்தனை எண்ணெய் பெரல்கள் அனுப்பப்படுகின்றன?

சரியான விடை....................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 165,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 163 இன் சரியான விடை: 123 ஆசனங்கள்**

பரிசு பெறுவோர்

எம்.டிஷாந்தன்,
18/10, ஊவா கட்டவளை, ஹாலி-எல.

க.தாரணி,
72, பிரதான வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு.

எஃப்.சஜானா,
146, கிறீன்வெலி எஸ்டேட்,
பக்மீகொல்ல, இப்பாகமுவ.

## தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் பிரிட்டனில் அரசியல் புகழிடம்!

ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த தாய்லாந்தின் முன்னாள் பிரதமரான தக்ஷின் செனவாத்ரோ லண்டனின் அரசியல் புகழிடம் கோரியுள்ளார்.

2006 ஆம் ஆண்டில் தன்னை ஆட்சியிலிருந்து வெளியேற்றியவர்கள், மற்றும் அரசியல் எதிரிகள் நீதிமன்ற செயற்பாடுகளில் தலையீடு செய்து தன்னையும் தனது குடும்பத்தையும் அழிப்பதற்கு முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தனக்கும் தனது மனைவிக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கில் தம்மால் சமூகமளிக்க முடியாமல் இருப்பதையிட்டு நீதிமன்றத்திடமும் நாட்டு மக்களிடமும் கவலை தெரிவித்து எழுதப்பட்டுள்ள கடிதம் அங்குள்ள ஊடகங்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன. தனது தாய் நாட்டை கைவிட்டு பிரிட்டனுக்கு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டமைக்கும் ஷெனவாத்ரோ தனது கவலையை குறிப்பிட்டுள்ளார்.

ஷெனவாத்ரோயின் மனைவி மீது வரிப்பண மோசடிக்காக மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில், பிணையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே, தக்ஷின் செனவாத்ரோவும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டி தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

தாய்லாந்து வங்கிகளில் ஷெனவாத்ரோவின் பெயரில் வைப்பில் இடப்பட்டிருந்த இலங்கை நாணயப்படி 62 கோடி ரூபா பணத்தை அந்நாட்டு அரசாங்கம் முடக்கி விட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகத்தான கலைஞர்

# மைக்கல் ஏஞ்சலோ









தமது மனதுக்குப் பிடித்த ஒரு கலைப் படைப்பைக் கண்டால் அதனை வைத்த கண் வாங்காமல் பல மணி நேரங்களுக்குப் பார்த்து ரசிக்கும் பழக்கமுடைய வர்களை நீங்கள் கண்டி ருக்கக்கூடும். ஏன், நீங்கள் கூட அவ்வா றான ரசனையைக் கொண்டவராக இருக் கக்கூடும். தமது படைப் புகளின் பக்கம் ஏனைய வர்களை ஈர்க்க வைப் பது ஒரு சிறந்த கலை ஞரின் திறமை என்றே கூறவேண்டும்.

அவ்வாறன திறமை மிக்க கலைஞர்களில் ஒருவர் தான் மைக்கல் ஏஞ்சலோ. அவரின் படைப்புகளை நீங்கள் பார்வை யிட்டு இருப்பீர்களாயின் உங்க ளுக்குள் இனம் புரியாத வியப் புண்டாகும் என்பது உண்மையே!

'சிஸ்டைன் செப்பல்' என்ற மாதா கோவிலில் மைக்கல் ஏஞ்ச லோவினால் வரையப்பட்ட ஓவியங் களை நீங்கள் காண ஆரம்பித்தால், வைத்தகண் வாங்காமல் அவற்றை ரசிக்கத் தொடங்குவீர்கள். அழகின் ஆச்சரியத்தில் நீங்கள் அசந்தே போய்விடுவீர்கள்.

மைக்கல் ஏஞ்சலோவின் முழுப் பெயர் Michelangelo di lodovico Buonarroti Simoni என்பதாகும்.

கலைஞர், சிற்பி, கட்டடக்கலை நிபுணர், ஓவியர் மற்றும் கவிஞர் என பல்வேறுபட்ட பாத்திரங்களில் தனது வாழ்வில் மிளிர்ந்தவராக இருந்தாலும் மைக்கல் ஏஞ்சலோவை அதிக மானோர் ஒரு சிற்பியாகவே இனங்கண்டிருந்தனர்.

லியனாடோ டாவின்ஸியைப் போன்றே மைக்கல் ஏஞ்சலோவும் சிறந்த ஆசிரியர் ஒருவரின் சீடரா கவே இருந்தார். அவரது ஆசிரிய ரின் பெயர் Domenico Ghirlandaio ஆகும். Domenico விடம் மூன்று ஆண்டுகள் கல்வி பயின்ற ஏஞ்சலோ, பின்னர் Lorenzo de Medici என்பவரிடம் கல்வி பயில ஆரம்பித்தார்.


1490 முதல் 1492 வரை Lorenzo வினது பாடசாலையில் கல்வி பயின்ற மைக்கல் ஏஞ்சலோ, அங்கு கற்கும் காலத்தில் தனது ஓவியம் தொடர்பான எண்ணங்களை மாற்ற வும் விரிவுபடுத்தவும் உதவும் பல ரையும் சந்திக்கலானார். Lorenzo வின் மறைவின் பின் மைக்கல் ஏஞ்சலோவிற்கு ஓவியம் தொடர் பாகக் கற்றுக்கொள்ள ரோம் செல்ல வேண்டியதாயிற்று. அங்கு சென் றதும் ரோமிலுள்ள பண்டைய ஓவி யங்களின் பிரமாண்டத்திலும் அதன் அழகிலும் மிகவும் கவரப்பட்ட ஏஞ்சலோ, அவ்வோவியங்களின் உன்னதமான நிலைகளால் உந்தப் பட்டார்.

ரோமில் அவர் 'Pieta'எனும் சிற்ப மொன்றைச் செதுக்கினார். Pieta என்பதை மிகப்பெரும் கலைப் படைப்பாக உலகமே வியந்து பார்த்த நிலையில், ஏஞ்சலோவின் புகழ் மேலும் வளர்ச்சி காணத் தொடங்கியது. இயேசுநாதர் இறந்த தும் அவரை தன் மடியில் வைத்துக் கொண்டிருக்கும் அன்னை மரியாளை சித்தரிக்கும் சிற்பமே Pieta என்ற பெயர் கொண்டு அழைக் கப்படுகின்றது.

இந்தச் சிற்பத்தை உலகம் ஆச்சரி யமே உருவாய்க் காண்பதற்கு அந்தக் கலைப்படைப்பில் காணப்பட்ட உயிர்ப்பான தன்மையே காரண மாகியது எனலாம்.

நான்கு வருடங்களுக்குப் பின்னர், தனது சொந்த நகரமான ஃப்ளோரன் ஸுக்குச் சென்ற ஏஞ்சலோ, ஒப்பற்ற, அழகிய, பிரமாண்டமான 'David' எனும் சிற்பமொன்றைச் செதுக்கி பிர பல்யமானார். இந்தச் சிற்பத்தின் மூலம் பிரபல்யமடைந்த மைக்கல் ஏஞ்சலோவின் புகழை அறிந்த இரண் டாம் ஜூலியஸ் எனும் பாப்பரசர், அவரை ரோமுக்கு அழைத்து அங்கு கலைத்துவம் மிக்க படைப்புகளை நிர்மாணிக்கும்படி பணித்தார். இருந்தபோதி லும் வேறு பல வேலை களைச் செய்யவேண்டிய அவசியம் இருந்த காரணத்தினால் தொடர்ச் சியாக பல கட்டங்களில் ஏஞ்சலோவினால் நிர்மாணப் பணிகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

-தாரிக் அஸீஸ்



## 'இடத்திற்கேற்ற விவேகம்' சிறுவர் கதை

பிரபல ஓவியரும் சிறுவர் கதை ஆசிரியருமான ஹிங்குல்வல திசாநாயக்க எழுதி, ஓவியம் தீட்டிய 'இடத்திற்கேற்ற விவேகம்' என்ற சிறுவர் கதை நூலொன்று வெளியாகியுள்ளது. காட்டிலுள்ள ஆற்றில் குளிக்கச் சென்ற கழுதையொன்றை வேட்டையாட வந்த புலியிட மிருந்து தன்னை தற்காத்துக் கொண்ட கழுதை யின் விவேகத்தைப் பற்றிய கதையே இந்நூ லில் உள்ளது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இக்கதை வழங் கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இருபது பக் கங்களைக் கொண்ட இந்நூலில் கதைக்கேற்ப அழகிய ஓவியங்களை காண முடிகின்றது. இது வொரு 'நுவன்' பதிப்பகத்தின் வெளியீடாகும்.

நூலின் விலை - ரூ 120/-

தொடர்புகளுக்கு :-

நுவன் பிரிண்டர்ஸ் எண்ட் பப்ளிகேஷன்ஸ், 178 C-11, ஜா-எல வத்த, ஆண்டிஅம்பலம.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆழ்ந்த நித்திரையிலிருந்தவன் யாரோ கத்தும் சத்தம் கேட்டு விழித்துப் பார்த்தபோது அங்கே கோபக்கனல் வீச நின்று கொண்டிருந்த முதலாளியை கண்டு அதிர்ச்சியடைந்தான்.

''ஏன்டாப்பா, இதுதான் நீ காவல் காக்கும் லட்சணமா? நான் ஏதோ நீ கண் விழித்து காவல்காப்பதா நினைச்சி சந்தோஷப்பட்டுட்டேன். உன்னை நம்பினா நான் ரோட்டுலதான் நிக்கணும் போல இருக்கு. இனிமேல் உனக்கு இங்கு வேலை கிடையாது. இப்பவே போ வெளிய'' என்று கத்தினார்.

விமல் குழைந்தபடி ''ப்ளீஸ்.. முதலாளி, மன்னிச்சிக்குங்க. மாதவன் அண்ணன் வந்து 'ட்ரயல் ஷோ' பார்த்தாரு. இப்ப கொஞ்சம் முந்தித்தான் வீட்டுக்குப் போனாரு. இப்ப விடிஞ்சிட்டதாலதான் கொஞ்சம் கண்ணயர்ந்திட்டேன்''

''நீ லேசா சொல்லிட்ட.. இங்க என்ன நடந்திருக்குத் தெரியுமா? தியேட்டர் வளவுல நான் ஆசையோட வளத்த பூஞ்செடிகளில் இருந்த பூக்களையெல்லாம் ஸ்கூலுக்குப் போற பயலுக வந்து பறிச்சிக்கிட்டு போய்ட்டாங்க. நீ இங்க ஹாயா... தூங்கிகிட்டு இருக்க'' என்றவர் பின்னர், ''என்கூட வா'' என்று விமலை கூட்டிக்கொண்டு சென்றார்.

வெளியில் போய் திரையரங்கு அமைந்துள்ள சுற்றுப்புறச்சூழலைக் காட்டினார். ''அதோ பார், அதுவரை தியேட்டருக்கு சொந்தமான இடம்தான். உள்ளே நுழைந்து பூக்களைப் பறித்திருக்கிறார்கள். நீ காவல் பார்க்க வேண்டியது தியேட்டருக்குள் மட்டுமல்ல, சுற்றுப்புறத்திலும்தான். அது முடியாவிட்டால் நீ வேலையை விட்டுப் போக வேண்டியதுதான்'' என்று கூறினார்.

''தியேட்டர் காவல்காரர் வரும் வரையில் தானே நமக்கு இந்த வேலை. அதற்குப் பின் 'டிக்கட்' கிழிக்கும் வேலை மட்டும் தானே. அதை செய்து கொண்டு மாதவனிடம் 'ஒப்பரேட்டர்' வேலையை படிக்க வேண்டுமென்றால் கொஞ்சம் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டவன் அவரிடம், ''முதலாளி, இனிமேல் இங்கெல்லாம் வந்து பார்த்துக் கொள்கிறேன். இந்த முறை மட்டும் மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''ம்.... சரி.... சரி.... உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. ஆனால், ஒன்று இனிமேல் நீ 'பஞ்சிங்' அடிக்க வேண்டும்'' என்றார்.

அவர் சொன்னது அவனுக்குப் புரியவில்லை. ''பஞ்சிங்கா? அப்படியென்றால் என்ன முதலாளி?''

''அதாவது அதோ அந்த சுற்று மதிலில் 'பஞ்சிங் க்ளொக்' பொருத்தப்பட்டிருக்கிறது. அது நேரத்தைக் காட்டிக் கொண்டே இருக்கும். நீ ஒரு மணித்தியாலத்துக்கு ஒருமுறை அதில் போய் பேனாவால் அடையாளமிட்டு விட்டு வரவேண்டும். நீ ஒரு முறையாவது நேரத்துக்கு போய் அடையாளமிடாமல் விட்டால் நீ போகாததை அது காட்டிக்கொடுத்து விடும். வா 'பஞ்சிங்' செய்வது எப்படியென்று காட்டித்தருகிறேன்'' என்று அவனை அங்கே அழைத்துச் சென்றார்.

'பஞ்சிங் க்ளொக்' வைக்கப்பட்டிருந்த இடத்துக்கும் திரையரங்குக்கும் இடையில் ஓரளவு தூரமிருந்தது. போகும்

## பீதியை அதிகரிக்கச் செய்யும் நிகழ்வு



வழியில் ஒரு சில அடர்ந்த மரங்கள் இருந்தன. ஆலமரம், மாமரம் என்பனவும் இருந்தன. அந்த மரங்களூடாக இரவில் மணிக்கொரு தடவை போக வேண்டுமே என நினைக்கையில் அவனுக்கு குடல் நடுங்குவது போலிருந்தது. ஆனாலும், அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அவரோடு போய் பஞ்சிங் க்ளொக்கைப் பார்வையிட்டான்.

அது சாதாரண கடிகாரம் போல் இருந்தாலும் அதில் டயல் முற்றாக மூடப்பட்டிருந்தது. ஒரு இலக்கம் மட்டும் வெளியில் தெரியும் வகையில் துவாரம் இருந்தது. சாதாரண கடிகாரத்தில் முள் சுழல்வது போல் இந்த கடிகாரத்தில் டயல் சுழல்கிறது என ஊகித்துக் கொண்டான். அதிலுள்ள துவாரத்தினூடாக இலக்கத்தில் பேனாவால் குறியிட வேண்டுமென்று முதலாளி அவனுக்கு சொல்லிக் கொடுத்தார்.

**தியேட்டருக்குள் மட்டுமே இருக்கப் பயந்த நான் இனி பாழடைந்து காணப்படும் சுற்றுப்புறத்திலும் காவல் காக்க வேண்டுமே என்று நினைக்கையில் விமலுக்கு குடல் நடுங்குவது போல் இருந்தது.**

அதைப்பார்த்து வியப்படைந்த விமல், ''முதலாளி குறியிடும் அடையாளம் இலக்கத்தில் பட்டுவிடுமே. அப்படியானால் மறுநாள் அதில் குறியிடுவது எப்படி?'' என்று கேட்டான்.

முதலாளி சிரித்து விட்டு, ''நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே. நாங்கள் ஒவ்வொரு நாளும் இலக்கக் கார்டை மாற்றிவிடுவோம்'' என்று கூறினார்.

பின்னர், ''ம்... சரி..சரி... இனி நீ போய் படுத்துத் தூங்கி நன்றாக ஓய்வெடுத்துக்கொள். இனிமேல் கடமையில் கண்ணும், கருத்துமாக நடந்துகொள்'' என்று புத்திமதி கூறிவிட்டு சென்றார்.

விமலுக்கு அன்றைய இரவை நினைக்கையில் மிகவும் பயமாக இருந்தது. ''தியேட்டருக்குள் இருக்கும்போதே நடுக்கமுற்ற நான் இனி வெளியிலும் வந்து காவல் காக்க வேண்டுமே. அதுவும் தியேட்டர் சுற்றுப்புறம் பாழடைந்து அல்லவா காணப்படுகிறது. அடர்ந்த மரங்களைப் பார்க்கையில் அதைவிட பயங்கரமாக இருந்தது. பகலிலேயே இப்படி இருக்கும் இந்த இடம் இரவில் எப்படி இருக்கும்?'' என்று நினைத்துக் கொண்டான்.

அன்றைய பொழுது மறைந்து அவன் எதிர்கொள்ளப் பயந்திருந்த அந்த இரவு அண்மித்துக் கொண்டிருந்தது.

(தொடரும்.....)

# காகத்தின் அறிவுரை



முன்பொரு முறை குருவியொன்று கூடு இல்லாமல் மிகவும் தவித்தது. தனக்கு எப்படியும் ஒரு கூடு கட்டியே தீர்வது என அது முடிவு செய்தது. தோப்புக்குள் நுழைந்த அக்குருவி இங்கும் அங்கும் சுற்றிப் பார்த்தது. கூடு கட்டும் விஷயத்தில் முன் அனுபவம் இல்லாததால் அருகில் நின்று கொண்டிருக்கும் முருங்கை மரத்தில் கூடு கட்டி வசிக்க தேங்காய் நார்களை எடுத்து வந்து கூடுகட்டும் முயற்சியில் இறங்கியது. குருவி கூடு கட்டிக் கொண்டிருப்பதை ஒரு காகம் பார்த்தது.

''ஏ... குருவியே...! உனக்கு வேறு மரம் எதுவும் கிடைக்கவில்லையா? போயும் போயும் இந்த முருங்கை மரத்தில் கூடு கட்டுகின்றாயே, இந்த முருங்கை மரத்தில் நீ கூடு கட்டுவதால் ஏற்படப் போகின்ற ஆபத்தை உணர்ந்தாயா?'' என்று கேட்டது.

''அது என்ன ஆபத்து?'' என்று வியப்புடன் வினவியது குருவி.

''இந்த முருங்கை மரத்தில் தோட்டக்காரர் அடிக்கடி காய்களையும் கீரைகளையும் பறித்துச் செல்வார். அவ்வாறு பறிக்கின்ற வேளையில் உன் கூட்டிற்கும் ஏதேனும் சேதம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அத்துடன் இந்த மரம் மிகவும் பலவீனமான மரம். உடனே முறிஞ்சு போய்விடும். எனவே, நான் சொல்வதைக் கருத்தில் ஏற்றுக்கொண்டு நீ கூடு கட்டுவதற்கு வேறு இடத்தை தேடிக்கொள்?'' என்றது காகம்.

''சரி, காகம் அங்கிள். அப்படியே செய்கிறேன்'' என்ற குருவி காகத்தின் அறிவுரையை ஏற்றுக் கொண்டது. உடனே வேறு மரத்தில் கூடு கட்டி வசித்தது. ஒருநாள் அடை மழையில் முருங்கை மரம் கீழே சரிந்தது.

''நல்லவேளை, காகத்தின் யோசனையைக் கேட்டேன். இல்லையேல் மரத்தோடு நானும் விழுந்திருப்பேன்'' என்று நினைத்த குருவி மனதால் காகத்திற்கு நன்றி கூறியது.

அனுபவசாலிகள் கூறும் புத்திமதிகளை எப்போதும் நாம் கேட்டு நடக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியை சுழற்றியடித்த மெண்டிஸ்

## எவ்வாறு கிரிக்கெட்டில் அறிமுகமானார்?







**இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் தனது சுழல் பந்து வீச்சின் மூலம் இந்திய அணியை சுழற்றியடித்திருப்பவர்தான் இலங்கை அணியின் புதிய கண்டுபிடிப்பாளரான அஜந்த மெண்டிஸ்.**

**ஒரே போட்டித் தொடரில் இலங்கை அணியின் ஹீரோவாகிய அஜந்த மெண்டிஸ் பற்றிய சில விபரங்கள் இங்கு வழங்கப்படுகின்றன....**

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவையில் பிறந்த இவர் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாவார். குடலான புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட போதிலும், பின்னர் மொரட்டு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும்போது கிரிக்கெட் போட்டிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபடலானார். 2000 ஆம் ஆண்டில் மொரட்டு மகா வித்தியாலயத்தில் 15 வயதிற்கு கீழானோருக்கான கிரிக்கெட் அணிகளில் இடம்பெற்றவர். அதனையடுத்து 19 வயதிற்கு கீழானோருக்கான பாடசாலை அணியிலும் இடம்பெற்று அணியின் உபதலைவர் பதவியினையும் வகித்துள்ளார்.

இதன் மற்றுமொரு வளர்ச்சிப்படியாக 2003 ஆம், 2004 ஆம் வருடங்களில் அகில இலங்கை ரீதியிலான போட்டிகளில் கலந்து தனது திறமையை வெளிப்படுத்திய அஜந்த மெண்டிஸ் ஒரு தடவை இராணுவ அணியுடனான போட்டியொன்றில் இராணுவ அணிக்கு எதிராக 5 விக்கெட்களைப் பெற்றிருந்தார். இவரது திறமையை கணக்கிட்ட இராணுவ அணியினர் இவரைத் தமது அணியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தனர். இதன் காரணமாக அவர் இராணுவ அணியில் இணைந்தார். அன்றிலிருந்து இன்றுவரை அவர் இலங்கை இராணுவ அணியில் சுழல் பந்துவீச்சாளராக இருந்து வந்துள்ளார்.

இவ்வாறு தொடர்ச்சியாக அவர் தனது திறமையை வெளிக்காட்டியதன் காரணமாகவே இலங்கை தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பும் மெண்டிஸுக்கு கிடைத்தது.

இலங்கையில் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற 'பிரிமியர் லீக்' போட்டிகளில் இவர் வெளிப்படுத்திய திறமையின் காரணமாக இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினரால் 2008 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் மாகாண மட்டப் போட்டிகளில் இவரை போட்டியிட அனுமதித்தது. இதன்படி, மஹேல ஜயவர்தனவின் தலைமையிலான அணியில் அஜந்த மெண்டிஸ் இடம் பெற்றிருந்தார். இப்போட்டிகளில் அஜந்த மெண்டிஸ் கூடிய அளவில் திறமையை வெளிப்படுத்தியமையால் அநேகமான கிரிக்கெட் விமர்சகர்கள் இவரை முரளிதரனுக்கு ஈடான ஒரு பந்து வீச்சாளராகக் கருதினர். பெறுபேறாக இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழு மெண்டிஸை இந்த வருட ஆரம்பத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டியில் இலங்கை அணியில் சேர்த்துக்கொண்டது. இதுவே அவரது முதலாவது சர்வதேச போட்டியாக அமைந்தது. இதில் அவர் மூன்று விக்கெட்களை கைப்பற்றினார். இதனையடுத்தே உலகம் பூராவும் இவர் பேசப்பட்டார். இதன் பெறுபேறாக இந்தியாவில் நடைபெற்ற 'இந்தியன் பிரிமியர் லீக்' போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. இதன் மற்றுமொரு படிக்கல்லாகவே ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிகளில் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களைப் பெற்று இந்திய அணியை தோற்கடிக்க காரணகர்த்தாவானார்.


ஆசியக் கிண்ண போட்டிகளிலும் இவரது திறமையை பளிச்சிடச் செய்தமையால் இலங்கை வந்துள்ள இந்திய அணியுடனான போட்டிகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார். இதன் ஒருகட்டமாகவே இந்திய அணியை 2-1 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை தோல்வியுறச் செய்து மொத்தமாக 26 விக்கெட்களைக் கைப்பற்றி உலக சாதனையும் நிகழ்தியுள்ளார். ஆரம்பகட்டத்திலேயே சாதனையை நிகழ்த்தியுள்ள அஜந்த மெண்டிஸ் இனிவரும் காலங்களிலும் பல சாதனைகளை தனது பந்து சுழற்றலில் வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு ஓவரிலுள்ள ஆறு பந்துகளையும் ஆறு விதமாக சுழற்றும் சிறப்பைக் கொண்டிருப்பதே மெண்டிஸின் தாரக மந்திரமாக அமைந்துள்ளது. பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர்கள் அஜந்த மெண்டிஸை 'கெரம்போள் மேன்' என்று அடையாளப்படுத்தி வர்ணிக்கின்றனர். அவரது பந்து வீச்சுப்பாணி கெரம் விளையாடும் சைகையைப் போல் இருப்பதாலேயே இவ்வாறு அவர்கள் தெரிவிக்கின்றனர்.














பீஜிங் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழா அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. அவ்வாறு மெய்சிலிர்க்க வைத்த காட்சிகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெஹிவளையில் பிறந்த

# 'அனகொண்டா' குட்டிகள்





தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் அண்மையில் 23 'அனகொண்டா' குட்டிகள் பிறந்த செய்தியை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இலங்கை மிருகக்காட்சிசாலையில் 'அனகொண்டா' குட்டிகள் பிறந்தமை இதுவே முதற்தடவையாகும். அதனால், இது ஒரு வரலாற்று சம்பவமாகவும் அமைகின்றது. அதேபோன்று மிருகக்காட்சிசாலையொன்றில் கண்ணாடிக் கூண்டில் அடைக்கப்பட்ட அனகொண்டா பாம்பு ஒன்று குட்டி ஈன்றதும் வியப்பான விடயமாகும். இங்கு பிறந்த 23 குட்டிகளில் 20 குட்டிகள் மட்டுமே உயிர் பிழைத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, 'அனகொண்டா' பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

### யார் இந்த அனகொண்டா?

தென் அமெரிக்க'அமேசன்' மழைக்காடுகளை வசிப்பிடமாக கொண்ட பாம்பு வகையே இந்த அனகொண்டா. இதைத் தவிர, மலேசியாவின் சதுப்பு நிலங்களிலும் அனகொண்டா வகை பாம்புகள் வசிக்கின்றன. அனகொண்டா பாம்புகள் மலைப்பாம்புகள் வகையைச் சேர்ந்தவை. அதாவது, 'பொய்டே' (Boidae) இனத்தைச் சேர்ந்தவை. அதன் விலங்கியல் விஞ்ஞானப் பெயர் இயுனெக்டஸ் மியூரினஸ் *(Eunectus murinus)* என்பதாகும்.

### மலைப்பாம்புகளில் இராட்சதன்

பொதுவாக மலைப்பாம்பினமானது, (Python) பாம்பினங்களிலேயே மிகப் பெரிய இனமாகும்.எனினும், அனகொண்டாதான் பாம்பு இனங்களிலும் மலைப்பாம்புகளிலும் பெரிய இனமாகக் கருதப்படுகின்றது. நன்கு வளர்ச்சி பெற்ற அனகொண்டா ஒன்று 9 மீற்றர் அல்லது 30 அடி நீளம் கொண்டதாக இருக்குமாம்.

### மிருகங்களை இரையாக்கிக் கொள்வதில் திறமைசாலி

அனகொண்டா பாம்பினமானது, சதுப்பு நிலப் பிரதேசங்களில் அதிகமாக வாழும் இயல்பினைக் கொண்டது. அமைதியாக நீருக்கு அடியில் பதுங்கியிருந்து இரைகளைக் கவ்விப் பிடிப்பதில் அவை மிகவும் திறமை வாய்ந்தவை. தென் அமெரிக்க 'அமேசன்' ஆற்றை அண்டிய பிரதேசங்களிலும் மழைக்காடுகளிலும் வசிக்கும் அனகொண்டாக்களின் பிரதான உணவாக அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு வகை எருமை இனங்களே உள்ளன. இந்த எருமை இனம் தென் அமெரிக்காவின் 'அமேசன்' காடுகளுக்கே உரித்தான விலங்கினமாகும்.

இவற்றைத் தவிர குரங்குகள், பறவைகள், முதலைகள், சிறுத்தைகள் மற்றும் பழங்குடி மக்கள் வளர்க்கும் கால்நடைகள் என்பனவற்றையும் அவை தமது இரையாக்கிக் கொள்கின்றன. அனகொண்டா பாம்புகள் திறமையாக நீந்தக்கூடியன. அத்தோடு அவை மிக எளிதாகவும் விரைவாகவும் மரங்களில் ஏறும் திறன் வாய்ந்தவை.

### விஷம் இல்லாவிடினும் பயங்கரமானது

இதர மலைப்பாம்புகள் இனத்தைப் போன்று இவையும் விஷ அபாயம் அற்றதாகும். இரைகளை அவை இறுக்கிப் பிடித்து முடக்குவதன் ஊடாக அவற்றைக் கொன்று விடுகின்றன. இரைகள் மூச்சுத் திணறி, எலும்புகள் நொருங்கும் அளவுக்கு அனகொண்டா பாம்புகள் அவற்றை வளைத்துப் பிடித்து முடக்கி விடுகின்றன.




- அநேகமான பாம்புகள் முட்டையிட்டாலும் அனகொண்டாவின் முட்டைகள் அவற்றின் உடலினுள்ளேயே பாதுகாப்பாக இருக்கும். முட்டைகள் பொரித்த பின்னரே அவை குட்டிகளாக வெளியே வரும்.
- முட்டைகளின் மஞ்சள் கருப் பகுதியினை உட்கொள்வதன் ஊடாக குட்டிகள் போஷாக்கினைப் பெற்றுக் கொள்கின்றன. ஏனைய போஷாக்கினை அவை பெறுவதில்லை.
- பிறப்பின் பின்னர் தாயின் உதவியின்றி குட்டிகள் வாழும்.

விலங்குகளின் விந்தையான உலகத்தை வெளிக்காட்டிய, பிரபலம் வாய்ந்த சேர்.டேவிட் அட்டன்பரோவினால் நடத்தப்பட்ட 'லைப் ஒப் கோல்ட் பிலட்' என்ற பி.பி.சி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பெண் அனகொண்டா ஒன்று குட்டிகளை ஈனும் காட்சிகள் கட்டம் கட்டமாக சித்தரிக்கப்பட்டுள்ளதை கீழுள்ள படத்தில் காணலாம்.




### பெண் அனகொண்டா

அனகொண்டா பாம்புகளில் பெண் பாம்புகள் ஆண் பாம்புகளை விட 5 மடங்கு பெரியது. எமது மிருகக்காட்சி சாலையில் 23 குட்டிகளை அனகொண்டா ஈன்றிருந்தாலும் பொதுவாக அவை 80 குட்டிகள் வரை ஈனும் என்று அறியப்பட்டுள்ளது. ஒரு அனகொண்டா குட்டி 250 முதல் 300 கிராம் வரை நிறையுடையதாகும். கருவுற்று இருக்கும் போது அனகொண்டாக்கள் இரைகளை உண்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வெள்ளித்திரையில் அனகொண்டாக்கள்

அனகொண்டாக்கள் மனிதர்களை இரையாக்கிக் கொள்ளுமளவுக்கு மிகப் பயங்கரமான மலைப் பாம்பு இனமல்ல.எனினும்,'ஹொலிவூட்' சினிமாக்காரர்கள் இந்த அனகொண்டா பாம்பு வகைகளை மோசமான-பயங்கரமான-மனிதர்களை இரையாக்கிக் கொள்ளும் பாம்புகளாக திரைப்படங்களில் சித்தரித்துள்ளனர். இதுவரை அனகொண்டாக்கள் தொடர்பான இரண்டு திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. இதில்முதலாவது திரைப்படம் 'அனகொண்டா' என்ற திரைப்படம். இத்திரைப்படம் 'அமேசன்' ஆற்றில் வாழும் இராட்சத அனகொண்டாவைப் பற்றியதாகும். இரண்டாவது திரைப்படம் 'அனகொண்டாஸ் ஹன்ட் ஒப் த பிளக் ஒகிட்' எனற திரைப்படமாகும். இத்திரைப்படத்தில் இந்தோனேஷிய 'போர்னியோ' காடுகளில் வசிக்கும் இராட்சத அனகொண்டாக்கள் பற்றி சித்தரிக்கப்படுகின்றது.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.181 5



### மேலிருந்து கீழ்

01. இந்தியாவையும் இலங்கையையும் இணைத்திருந்ததாகக் கூறப்படும் கடலடிப் பாதை.
02. கோதுமை, கிழங்கு வகைகளினால் தயாரிக்கப்பட்ட உணவுகளில் அதிகளவிலுள்ளது.
04. (பொதுவாக) களிமண்ணால் கட்டப்பட்டு வைக்கோல்/ ஓலையால் கூரை வேயப்பட்ட சிறிய வசிப்பிடம்.
05. சிறகு-ஒத்த கருத்துச் சொல் (குழம்பி)
07. 'கூழுக்கும் ஆசை; ............ ஆசை' என்பது பழமொழி.

### இடமிருந்து வலம்

01. வான்மீகியால் வடமொழியில் இயற்றப்பட்ட காவியம்.
03. மூல வர்ணங்களில் ஒன்று.
05. ''........... உயரக் கோன் உயரும்'' என ஔவையார் பாடியுள்ளார்.
06. உரிமையை அல்லது எல்லையைத் தாண்டுவதைக் குறிக்கும் சொல்.
08. வசை-எதிர்க்கருத்துச் சொல். (மாறி)

### குறுக்கெழுத்துப்போட்டி 178 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. பராக் ஒபாமா
02. துணி
03. கன்று
05. நாய்
06. ஊமை
07. காந்தம்

**இடமிருந்து வலம்**

01. பதுக்கல்
04. ராணி
06. ஊறுகாய்
08. ஒருமை
09. வேதம்
10. மானம்

குறுக்கெழுத்துப் போட்டி -181
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

சன்டுஜன் ராமச்சந்திரன், தரம் - 10A,
புனித ஜோன் பொஸ்கோ கல்., ஹட்டன்.

ஏ.ஆர்.எம்.மஹ்ரூம், தரம் - 9,
ஸஹ்ரியா அ.கல்., ஹெம்மாதகம.

வே.காயத்திரி, தரம் - 12(கலை),
விபுலானந்தா த.வித்., பத்கொட.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

## (A) நாடுகளின் தேசிய கொடியுடன் இணைக்க 2

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. ஈரான் | 1. |
| 2. ஜேர்மனி | 2. |
| 3. சிரியா | 3. |
| 4. கிறீஸ் | 4. |
| 5. சூடான் | 5. |
| 6. பிரேசில் | 6. |



## (B) கணக்குப் புதிர்


a) 7 ஆடுகள், 7 உறைகளிலிலுள்ள இலைகளைத் தின்று முடிப்பதற்கு 7 நாட்கள் எடுத்தன. அவ்வாறே, ஓர் ஆடு அதே அளவிலான 7 உறைகளிலுள்ள இலைகளைத் தின்று முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

.............................................

b) 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் பிரேமா, சங்கீதா, ஷோபா, ரேகா ஆகியோர் பங்குபற்றினர். பிரேமா ரேகாவை விட வேகமாக ஓடினாள். ஷோபா இவர்கள் இருவருக்கும் பின்னால் ஓடி வந்தாள். எனினும், பிரேமாவின் வேகம் சங்கீதாவிலும் குறைவாக இருந்தது. இவர்களின் ஓட்ட வேகத்திற்கு ஏற்ப 1,2,3,4 ஆம் இடங்களைப் பெறுபவர்களைக் குறிப்பிடுங்கள்.

1 ஆம் இடம் - ....................................
2 ஆம் இடம் - ....................................
3 ஆம் இடம் - ....................................
4 ஆம் இடம் - ....................................

## பொருத்தமற்ற படத்தில் X அடையாளமிடுக 3







**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.08.27 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 170
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## (A) குழம்பியுள்ள ஆங்கிலச் சொல்லை ஒழுங்குபடுத்தி எழுதுக 1

1) nlidsa - ..............................
2) mhycpraa - ..............................
3) sgnieu - ..............................
4) oacne - ..............................
5) phtyro - ..............................
6) useqar - ..............................

## (B) தமிழில் பொருள் தருக

1) branch - ..............................
2) wind - ..............................
3) foot print - ..............................
4) victory - ..............................
5) true - ..............................

## அறிவுக்கு விருந்து - 167 விடைகள்

**போட்டி: 01**

| (A) | (B) |
|---|---|
| 1. இருக்கை | 1. காடு |
| 2. தசாவதானி | 2. சூரியன் |
| 3. போக்குவரத்து | 3. குற்றம் |
| 4. அபூர்வம் | 4. ஒலி |
| 5. உடற்பயிற்சி | 5. கட்டளை |
| 6. தும்பிக்கை | |

**போட்டி: 02**

| (A) | (B) |
|---|---|
| a) 75 கிலோ மீற்றர் | 1) 324 - CCCXXIV |
| b) 150 கிலோமீற்றர் | 2) 87 - LXXXVII |
| c) 4500.00 ரூபா | 3) 102 - CII |
| d) 1224.00 ரூபா | 4) 816 - DCCCXVI |
| e) 28 மாணவர்கள் | 5) 409 - CDIX |


**போட்டி: 03**

(A)
* நெல்ஸன் மண்டேலா
** மூன்றாவது படத்திற்குரியவர்

**போட்டி: 04**

முதலாவது வரிசையிலுள்ள 1, 3 உருக்களும் இரண்டாவது வரிசையிலுள்ள 2 ஆவது உருவும் ஒரே மாதிரியானவை.

## வழி காட்டுங்கள் 4



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 167 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-178) |
|---|---|---|---|---|
| துர்கா ஜோதிபாலன், தரம் - 8, கிங்ஸ்டன் கல்., கொழும்பு-06. | றிபானா சாலிஹ், தரம் - 6, பொ/சுங்காவில் மு.ம.வித்., சுங்காவில். | எஸ்.நிதிஷ், தரம் - 8I, புனித அந்தோனியார் கல்., கட்டுகஸ்தோட்டை. | எம்.எஸ்.எம்.ஷமீம், தரம் - 3B, அஸ்ஹர் ம.கல்., அக்குறணை. | ஃபௌசுல் இனாயா, தரம் - 9, அஸ்ஸலாம் ம.வித்., இறக்குவானை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீரில் மூழ்கிய பூனைக்குட்டிகளை காப்பாற்றி பெருமை பெறும் நாய்

குளத்தில் மூழ்கி இறக்கும் தருவாயில் இருந்த பூனைக்குட்டிகளைக் காப்பாற்றி 'சுப்பர் ஹீரோ' என்னும் பெருமையைப் பெற்றுள்ளது நாய் ஒன்று.

அமெரிக்காவிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அமெரிக்காவின் மிச்சிகன் பகுதியில் தனது வளர்ப்பு நாயான நெப்போலியன் வீதியின் குறுக்கே ஓடுவதையும் பின்னர் குளமொன்றில் பாய்வதையும் கண்ட அதன் எஜமானி முதலில் அதன்மீது கோபங்கொண்டுள்ளார். குளத்தில் பாய்ந்த நாய் அங்கிருந்து ஒரு பையை வெளியே இழுத்து எடுத்து வந்தபோது அது ஏதோ குப்பையாக இருக்குமென்று அருவருப்படைந்துள்ளார். ஆனால், அந்தப் பைக்குள்ளிலிருந்து 'மியாவ், மியாவ்' என்னும் சத்தம் வருவதைக் கேட்டு அவர் வியப்படைந்துள்ளார்.

அந்தப் பைக்குள் ஆறு பூனைக்குட்டிகள் இருந்துள்ளன. அதில் கவலைக்குரிய விடயமென்னவெனில் இரண்டு குட்டிகள் ஏற்கனவே இறந்துபோய் இருந்ததுதான். ஏனைய நான்கு குட்டிகளும் நலமாக இருக்கின்றன. இதற்காக நெப்போலியனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

நெப்போலியனின் எஜமானியான அலெக்ஷாண்ட்ரா இதுபற்றிக் கூறுகையில் ''பூனைக்குட்டிகளின் அபயக்குரல் கேட்டு அவை ஆபத்தில் இருப்பதை உணர்ந்து விரைந்து செயல்பட்டு அவற்றைக் காப்பாற்றியுள்ளது நெப்போலியன்'' என்றார். தனது நாய் ஒரு 'செம்பியன்' என்றும் அவர் கூறினார்.

# ஒல்லாந்தரின் அதிகாரம் ஆரம்பமாதல்

## வரலாற்றிலிருந்து..



**1.** மன்னன் இராஜசிங்கனை அச்சமடையச் செய்ய வேண்டுமென்பதே தளபதி மெல்லோவின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதன் மூலம் கப்பம் பெறுவதே அவனது நோக்கமாகும். இந்தநோக்கத்திற்கு மந்திரி சபையின் அனுமதி கிடைக்கவில்லை. எனினும், அவன் தனது சுயவிருப்பத்தின் பேரில் புறப்பட்டான். மன்னனும் இவை அனைத்தையும் அறிந்து வைத்திருந்தான். தளபதியின் பயணத்தை நிறுத்த முயற்சித்தான். சமாதான ஒப்பந்தம் செய்யலாமெனக் கூறினான்.

**2.** அதனைத் தெளிவுபடுத்துவதற்காக பிரான்சிகன் சபை குருவானவரை அனுப்பினான். அதன் மூலம் மன்னன் மென்மேலும் அச்சமடைந்துள்ளான் என நினைத்துக் கொண்டான். படை அணியுடன் மெனிக்கடவரைக்குச் சென்றான். மன்னன் மற்றொரு பிரதிநிதியை அனுப்பினான். அவர் 'ஒகொஸ்தீன்' சபையைச் சேர்ந்த குருவானவரொருவர் ஆவார். அதுவும் பலன் அளிக்கவில்லை. தளபதி மெல்லோவின் படைகள் அட்டம்பிட்டிய, பலன, கடவத்தை ஆகிய இடங்களை கடந்து கண்டி நகருக்குள் நுழைந்தன. அதற்குள் மன்னன் அங்கிருந்து வெளியேறி இருந்தான். அவனின் படைகள் அரச மாளிகைக்கு தீ வைத்தன. அதன் பின் கண்ணொருவ நோக்கிச் சென்றன.

**3.** அங்கு செல்லும் பாதையில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதனாலும் இரவாகியதாலும் அன்றிரவு போர்த்துக்கேயர் இடையில் தங்கினர். சிங்களவர்கள் அவர்களை சுற்றி வளைத்தனர். மறுநாள் 'குருத்தோலை ஞாயிறு' தினமாகும். அதாவது, கி.பி 1638 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி. அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தனர். ஆனால் அவை பலனளிக்கவில்லை. இச்சம்பவத்துடன் மற்றொரு சம்பவமும் நடந்தது. முழு இலங்கையிலும் மாபெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. மல்வானை மற்றும் மெனிக்கடவரையிலிருந்து சிறிய படை அணிகள் கொழும்பு நோக்கி வந்தன.



**4.** சாந்தோமில் இருந்து கொழும்பை பாதுகாப்பதற்காக மனுவேல் மஸ்கரஞ்ஞாஸ் ஹோமேம் வந்தான். அவன் பாதுகாப்புப் படைப்பிரிவில் கட்டளைத்தளபதியாக நியமிக்கப்பட்டான். இவ்வேளையில் இராஜசிங்க மன்னனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. எனினும், அவன் வெற்றியை அனுபவிக்க ஆயத்தமாகவில்லை. குறைந்தபட்சம் கொழும்பைச் சுற்றி வளைப்பது பற்றியும் சிந்திக்கவில்லை.

**5.** எனினும், மன்னனின் சேனை கீழ்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது. தொன் அந்தோனியோ மஸ்கரஞ்ஞாஸ் தளபதியாக நியமனம் பெற்று யுத்த களத்திற்கு வந்தான். எனினும், உடனடியாகத் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சிங்களவர்கள் கைப்பற்றியிருந்த மல்வானையை அவன் மீண்டும் தாக்கினான். அச்சந்தர்ப்பத்தில் அங்கு இராஜசிங்க மன்னனுக்குப் பதிலாக தொன் அலெக்ஸியோ இருந்தான். அவனது படை அணி போர்த்துக்கேயரை விரட்டி அடித்தது.



**6.** கோபமடைந்த அவர்கள் நவகமவ, மெனிக்கடவரை, அட்டம்பிட்டிய ஆகிய ஊர்களைத் தாக்கி சேதம் விளைவித்தனர். வயது வித்தியாசமின்றி பச்சிளம் குழந்தைகள், பாலகர், பெண்கள், ஆண்கள் என பலரைக் கொன்றனர். இச்சந்தர்ப்பத்தில் ஒல்லாந்தர் கிழக்கே கல்முனையில் கரை இறங்கினர். அதற்கு கொஸ்டர் என்பவன் தலைமை தாங்கினான். கன்னொருவையில் இரண்டாம் இராஜசிங்கன் பெற்ற வெற்றி குறித்து அவன் அறிந்து கொண்டான். அதன்மூலம் போர்த்துக்கேயரின் வீழ்ச்சி குறித்தும் புரிந்து கொண்டனர்.

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

**7.** அது அவர்களுக்கு பெரியதொரு வாய்ப்பாகிவிட்டது. உடனடியாக மட்டக்களப்பிற்கு அவர்கள் விரைந்தனர். கோட்டையைச் சற்றி வளைத்தனர். தாக்கினர். ஏனைய கோட்டைகளில் இருந்து போர்த்துக்கேயர் அங்கு செல்வதைத் தடை செய்ய வேண்டுமென, இராஜசிங்க மன்னன் சிந்தித்தான். சேனையை அழைத்துக்கொண்டு மெனிக்கடவர கோட்டையைச் சுற்றி வளைத்தான். போர்த்துக்கேயரின் அனைத்துப் படைகளும் கடற்கரை மாகாணங்களில் முடங்கின. உள்நாட்டில் இருந்த கோட்டைகளை கைவிட்டனர். வேஸ்டர் வோல்ட் ஐந்து கப்பல்களுடன் மட்டக்களப்பிற்கு வந்தான். அவர்கள் சராமரியாக சுட ஆரம்பித்தனர்.

**8.** மன்னன் இராஜசிங்கனும் அங்கு சென்றான். பல ஒல்லாந்தர்களைச் சந்தித்தான். கடந்த பத்து ஆண்டுகளாக சகல தலையீடுகளுக்கும் காரணமாய் அமைந்த மட்டக்களப்பை ஒல்லாந்தர் கைப்பற்றினர். அத்துடன் ஒல்லாந்தரின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. இலங்கை மண்ணில் ஒல்லாந்தரின் அத்தியாயமும் ஆரம்பமாகியது.


*(முற்றும்)*

(அடுத்த இதழில் மற்றுமொரு தொடரை எதிர்பாருங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கிரேக்கர்கள் கணினி பயன்படுத்தியுள்ளனராம்

தற்போதைய யுகத்தை கணினி யுகம் என்று கூறுகின்றோம். ஆனால், இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க நாட்டவர்கள் கணினியை வடிவமைத்துள்ளனர் என்றால் நம்புவீர்களா? ஆம் நம்பித்தான் ஆகவேண்டும். ஆனால், இன்று நாம் காண்கின்ற கணினியைப் போன்றதல்ல அது. கூட்டல், பிரித்தல் போன்ற கணக்குகளை மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்டதே இந்தக் கருவியாகும். ஆழ்கடல் பகுதியில் மூழ்கிப் போயிருந்த புராதன கிரேக்க கப்பலொன்றில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தவர்களே இந்தக் கருவியை மேற்படி கப்பலிலிருந்து கண்டுபிடித்துள்ளனர்.





இதனை மேலும் ஆய்வு செய்ததில் இக்கருவி ஆயிரத்திற்கும் அதிகமான வருடங்கள் பழைமை வாய்ந்த கருவி என தெரியவந்துள்ளது. விண்வெளி நிலைவரம், வான்வெளியில் ஏற்படும் மாற்றங்கள், சந்திர கிரகணம், சூரிய கிரகணம் ஏற்படல் போன்றவற்றை அவதானித்து உரிய கணிப்புக்களை மேற்கொள்வதற்காகவே புராதன கிரேக்கர்களால் இக் கருவி உருவாக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கருவிக்கு Antikythera என்று பெயரிட்டுள்ளனர். பாதணியை (சப்பாத்து) வைக்கக் கூடிய அட்டைப்பெட்டியின் அளவைக் கொண்டதாகவே இந்த கருவி காணப்பட்டது. கடலுக்கு அடியிலிருந்து இதனை கண்டெடுக்கும் போது பெருமளவில் அது சேதமடைந்தே இருந்தது. அதனை வெளியே கொண்டு வந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது அதிலிருந்த உலோகத் துண்டுகள் உக்கிக் கொட்டத் தொடங்கின. இருப்பினும் மிகுதியாக இருந்த பகுதிகளைக் கொண்டு ஆராய்ச்சிகளை நடத்தியதில் இந்த கருவியானது விண்ணியல் கணிப்பீடுகளுக்கென பயன்படுத்தப்பட்ட ஒரு கருவியாக இருக்கலாம் என்பது தெரியவந்தது. இதனை மேலும் ஆராய்வதற்காக மேற்படி 'என்டிகைத்தெரா' கருவியை 'ஸ்கேன்' செய்து அதனை கணினியில் உட்செலுத்தப்பட்டு புகைப்பட உருவில் பிரதிகள் எடுக்கப்பட்டன.

'ஸ்கேன்' செய்யப்பட்டு கணினிக்குள் உட்செலுத்தப்பட்ட இந்தக் கருவியின் உருவமானது 'முப்பரிமாண' அளவில் ஆராய்ச்சியாளர்களால் நோக்கப்பட்டபோது, இந்தக் கருவி எவ்வாறு இயங்கியுள்ளது என்பதை நன்றாக அறிய முடிந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மிகவும் நுணுக்கமான வடிவமைப்பையும் வேலைப்பாடுகளையும் கொண்டதாக மேற்படி கருவி அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய கருவியொன்றை நுணுக்கமான வகையில் வடிவமைக்கும் அளவிற்கு கிரேக்கர்கள் பெற்றிருந்த தொழில்நுட்ப வசதிகள் குறித்தும், அவர்கள் கொண்டிருந்த தொழில்நுட்ப ஞானம் குறித்தும் விஞ்ஞானிகள் ஆச்சரியத்திற்குள்ளாகியுள்ளனர்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 20, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org